30.10.2015

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அணைகளில் நீர் இருப்பு தகவல் தர சென்னையில் கண்காணிப்பு மையம்

தமிழக அணைகளின் நீர் இருப்பு நிலவரத்தை கண்டறிந்து, அரசுக்கு உடனுக்குடன் தகவல் தர, சென்னையில், 24 மணி நேர கண்காணிப்பு மையம் அமைக்கப்பட்டு உள்ளது. பொதுப்பணித் துறையின் அங்கமான நீர்வளத் துறை கட்டுப்பாட்டில், மேட்டூர், பவானிசாகர், அமராவதி உட்பட, 15 முக்கிய அணைகள் உள்ளன. வடகிழக்கு பருவமழை மூலம், இந்த அணைகளுக்கு நீர்வரத்து உள்ளது. சில அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது; அணைகளின் நீர் இருப்பு அபாய கட்டத்தை எட்டும் போது, உபரிநீரை வெளியேற்ற வேண்டியது அவசியம்.இதற்கு பொதுப்பணித் துறையின் தலைமை அதிகாரி மூலம், அரசின் ஒப்புதலை பெற வேண்டும். எனவே, அணைகளின் நீர் நிலவரங்களை கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:சென்னை, சேப்பாக்கம், எழிலகம் வளாகத்தில் உள்ள பொதுப்பணித் துறை தலைமை அலுவலகத்தில், 24 மணிநேர கண்காணிப்பு மையம் அமைக்கப்பட்டு உள்ளது. இதில், மூன்று, 'ஷிப்டு'களில், தலா, இரண்டு ஊழியர்கள் பணியில் இருப்பர்; அத்துடன், தட்டச்சாளர் ஒருவரும் இருப்பார். மாநிலம் முழுவதும் இருந்து கிடைக்கும், அணைகளின் நீர் இருப்பு தகவல்களை, இவர்கள் சேகரித்து தலைமை செயலகத்திற்கு அனுப்புவர்.

அங்கிருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுபடி, அணைகளில் உபரிநீரை வெளியேற்றுவது; வெள்ள பாதிப்பில் இருந்து மக்களை மீட்பது குறித்த பணிகள், உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படும். இந்த, 24 மணிநேர கண்காணிப்பு மையம், டிச., 31ம் தேதி வரை செயல்படும்.இவ்வாறு அவர் கூறினார்.-

# தொடரும்!

- தமிழகம் முழுவதும் இன்னும் இரண்டு நாட்களுக்கு மழை...
- காற்றழுத்த தாழ்வு பகுதி நீங்கினாலும் பருவ மழை தீவிரம்

**சென்னை:** 'தமிழகம் முழுவதும், இன்னும் இரண்டு நாட்களுக்கு மழை தொடரும்; வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை நீங்கினாலும், வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.



**இதுகுறித்து, வானிலை ஆய்வு மையத்தின் இயக்குனர் ரமணன்**

**கூறியதாவது:** வங்கக் கடலின் தென்மேற்குப் பகுதியில், இலங்கைக்கு அருகே, மூன்று நாட்களுக்கு மேலாக நிலை கொண்டிருந்த, காற்றழுத்த தாழ்வு நிலை நீங்கி விட்டது. ஆனாலும், காற்று மேலடுக்கு சுழற்சி ஏற்பட்டு உள்ளது. இதனால், புதுச்சேரியிலும், தமிழக கடலோர மாவட்டங்களிலும், இரண்டு நாட்களுக்கு கன மழை பெய்யும்;

மற்ற மாவட்டங்களில், மிதமான மழை பெய்யும்.சென்னையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை அல்லது இடியுடன் கூடிய மழை, சில இடங்களில் பெய்யலாம். அரபி கடலில் உருவாகி உள்ள, 'சாப்லா' புயல், வளைகுடா நாடுகளை நோக்கி நகர்கிறது. அதனால், இந்திய பகுதிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை.இவ்வாறு அவர் கூறினார்.கடந்த, 24 மணிநேரத்தில், கன்னியாகுமரி, துாத்துக்குடி, நெல்லை, தேனி, சென்னை, திருவள்ளூர், தஞ்சை, நாகை, திருச்சி, திருவாரூர், ஈரோடு, சேலம், பெரம்பலுார் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில், 1 முதல், 7 செ.மீட்டர் வரை, மழை பதிவாகி உள்ளது.* அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு:மழை காரணமாக, கோவை, குமரி மாவட்ட அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.* பேச்சிப்பாறை அணைக்கு, வினாடிக்கு, 649 கனஅடி நீர் வருகிறது; நீர் மட்டம், 3.6 டி.எம்.சி.,யாக உயர்ந்துள்ளது; முழு கொள்ளளவு, 4.4 டி.எம்.சி.,* பெருஞ்சாணி அணைக்கு, வினாடிக்கு, 324 கனஅடி நீர் வரத்து உள்ளது. நீர் இருப்பு, 2.5டி.எம்.சி.,யாக உயர்வு; முழு கொள்ளளவு, 2.8 டி.எம்.சி.,

* கோவை மாவட்டம், ஆழியாறு அணைக்கு வினாடிக்கு, 326 கனஅடி நீர் வரத்து உள்ளது. நீர் இருப்பு, 3.3 டி.எம்.சி.,யாக உயர்வு; முழு கொள்ளளவு, 3.8 டி.எம்.சி.,

'சாப்லா' என்றால் என்ன?:

அரபிக் கடலில் உருவாகி, ஏமன் உள்ளிட்ட வளைகுடா நாடுகளை தாக்கும் புயலுக்கு, 'சாப்லா' என, பெயர் சூட்டியுள்ளனர். 'சாப்லா' என்றால், வங்க மொழியில், 'அமைதியின்மை' என, அர்த்தம்.இந்திய பெருங்கடலில் உள்ள, இந்தியா, பாகிஸ்தாஸ், ஏமன், வங்கதேசம், தாய்லாந்து, மாலத் தீவு, மியான்மர், இலங்கை ஆகிய நாடுகள், புயலுக்கு பெயர் சூட்ட பரிந்துரை செய்கின்றன; இந்த பெயர்களே சூட்டப்பட்டு வருகின்றன. தற்போது உருவாகியுள்ள புயலுக்கு, வங்கதேசம் பரிந்துரைத்த, 'சாப்லா' என்ற பெயர் சூட்டப்பட்டு உள்ளது.வடகிழக்கு பருவ மழை காலத்தில் உருவாகியுள்ள, முதல் புயல் இது.

## 'ஆர்கானிக்' சேலை கண்காட்சி துவக்கம்



சென்னை,:பழங்கள், காய்கறிகளால் உருவாக்கப்பட்ட இயற்கை சாயங்களுடன் கூடிய, 'ஆர்கானிக் பெங்கால்' காட்டன் சேலைகள் கண்காட்சி, சென்னை, சங்கரா ஹாலில் துவங்கியுள்ளது. மேற்கு வங்க மாநில நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பணியில், அம்மாநில அரசு உதவியுடன், 'ரங் மகால்' என்ற நெசவாளர் அமைப்பு செயல்படுகிறது. இந்த அமைப்பு, நாடு முழுவதும் கண்காட்சிகளை நடத்தி வருகின்றன. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சென்னை, ஆழ்வார்பேட்டை, சங்கரா ஹாலில், ஆர்கானிக் பெங்கால் காட்டன் சேலைகள் கண்காட்சியை துவக்கியுள்ளது. கண்காட்சி குறித்து, ரங் மகால் ஒருங்கிணைப்பாளர்

கூறியதாவது:பழங்கள், காய்கறிகளால் உருவாக்கப்பட்ட இயற்கை சாயங்களுடன் கூடிய, ஆர்கானிக் பெங்கால் காட்டன் சேலைகள், இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. 250 நெசவாளர்களின் கைவண்ணத்தில், 250 ரகங்களில் உருவான, 5,000 சேலைகள், கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, 'ஜல்சூரிஸ்' சேலைகள், மேற்கு வங்கத்தில் பிரபலமான, 'தாங்கைல் நக் ஷி பார்டர்' சேலைகள், 'ஜம்தானிஸ்' சேலைகள், கைவேலைப்பாடு, எம்ராய்டிங், இயற்கை சாய கைத்தறி சேலைகள் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. குறைந்தபட்சம், 680 ரூபாய் முதல், 10 ஆயிரம் ரூபாய் வரை சேலைகள் விற்பனை செய்யப்படுகின்றன. நவ., 8 வரை கண்காட்சி நடக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

**மானியங்களுக்கு விவசாயிகள் காத்திருப்பு இன்னும் எத்தனை நாள்...!, டிச., - ஜன.,ல் வரும் என நம்பிக்கை**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி வேளாண் பொறியியல் துறையில், 200க்கும் மேற்பட்ட விவசாயிகள், பல்வேறு மானியங்களுக்காக விண்ணப்பித்து காத்திருக்கின்றனர். விவசாய விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காதது, ஆட்கள் பற்றாக்குறை உட்பட காரணங்களால், விவசாய பரப்பளவு குறைந்து வருகிறது. விவசாயிகள் பலர், விவசாயத்தை கைவிட்டு, நகரங்களுக்கு குடிபெயர துவங்கியுள்ளனர். விளைநிலங்கள், தரிசாகவும், வீட்டு மனைகளாகவும் உருமாறுகின்றன. இது, உணவு உற்பத்தியில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்க, நவீன கருவிகளை நாட வேண்டிய கட்டாயம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக, அதிகமாக செலவிட முடியாத நிலையில், கருவிகளை வாங்க, அரசு தரப்பில்

மானியம் அளிக்கப்படுகிறது. பெரும்பாலான கருவிகள், வேளாண் பொறியியல் துறை மூலம் மானியத்தில் அளிக்கப்படுகிறது.

பொள்ளாச்சி, கிணத்துக்கடவு தாலுகாக்களுக்கு உட்பட்ட விவசாயிகள், பொள்ளாச்சி வேளாண் பொறியியல் துறை மூலம் பயனடைகின்றனர். 20 ஆயிரம் முதல், 28 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள, கால்நடை தீவனம் வெட்டும் கருவிக்கு, 45 பேர், 1.5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள, பவர் டில்லர் கருவிக்கு, 25 பேர், 66 ஆயிரம் முதல், 75 ஆயிரம் மதிப்புள்ள, பவர் வீடர் கருவிக்கு, ஐந்து பேர், 24 ஆயிரம் முதல் 30 ஆயிரம் மதிப்புள்ள, பிரஷ் கட்டர் கருவிக்கு, 48 பேர், டிராக்டர் கலப்பைக்கு, ஆறு பேர், ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள ரொட்டா வேட்டருக்கு, 46 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

சிறு, குறு மற்றும் தாழ்த்தப்பட்ட விவசாயிகள், பெண்களுக்கு, 50 சதவீதமும், பிற விவசாயிகளுக்கு, 40 சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது. விவசாய டிராக்டருக்கு, 23 பேர் விண்ணப்பித்துள்ளனர்; 20 முதல் 25 சதவீத மானியம் அளிக்கப்படுகிறது. ஐந்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள சோலார் பம்ப் செட்டுக்கு, 13 பேர் விண்ணப்பித்துள்ளனர்; 80 சதவீத மானியம் வழங்கப்

படுகிறது. விண்ணப்பித்து காத்திருக்கும், 200க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, இது வரை மானியம் வழங்குவது குறித்து, எவ்வித தகவலும் அளிக்கவில்லை. விவசாயிகள் சிலர் கூறுகையில், 'மானியம் கிடைத்தால் மட்டுமே, விவசாயப் பணிகளை முழுவீச்சில் மேற்கொள்ள முடியும். தற்போது பருவமழை துவங்கியுள்ள நிலையில், மானியத்தில் கருவிகள் கிடைத்தால், பயனுள்ளதாக இருக்கும். விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கை மட்டும் உள்ளது' என்றனர்.வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ராஜு கூறுகையில், "அரசுக்கு நிதி

கேட்டு விண்ணப்பித்தும், இதுவரை வரவில்லை. வந்தவுடன் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு, பதிவு மூப்பு அடிப்படையில், கருவிகள் வழங்கப்படும். வரும் டிசம்பர், ஜனவரி மாதங்களில், நிதி கிடைத்து விடும் என நம்புகிறோம்," என்றார்.

### கடலோரங்களில் பலத்த மழை

மாமல்லபுரம்;தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில், பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம், மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதையடுத்து மாமல்லபுரம், கல்பாக்கம் உள்ளிட்ட கடலோர பகுதிகளில், மீனவர்கள் கடலிற்குள் செல்ல வேண்டாம் என, அறிவுறுத்தப்பட்டது.

### யூரியா சப்ளை விக்கிரவாண்டி

விவசாய பணிக்கு 1,508 டன் யூரியா ரயில் மூலம் வரவழைக்கப் பட்டது.

விழுப்புரம் மாவட்ட விவசாய பணிக்காக ஆந்திர மாநிலம் காக்கி நாடா பகுதியிலுள்ள தனியார் உரத் தொழிற்சாலையிலிருந்து 1, 508 டன் யூரியா கொள்முதல் செய்யப்பட்டது. இந்த யூரியா மூட்டைகள், ரயில் பெட்டிகளில் ஏற்றப்பட்டு, முண்டியம்பாக்கம் ரயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின், யூரியா மூட்டைகளை, லாரியில் ஏற்றி உர விற்பனையாளர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

### பருவமழை துவக்கம் விவசாயிகள் உற்சாகம்

தியாகதுருகம்: பருவமழை துவங்கியுள்ளதை அடுத்து தொடர்ந்து கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் தியாகதுருகம் பகுதியில் நெல் நடவு பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர்.

தியாகதுருகம் பகுதியில் கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை குறைந்து விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நெல் சாகுபடி பரப்பு 3ல்

ஒரு பங்காக குறைந்து விட்டது. ஒருபோகம் நெல் பயிரிடுதவற்கு கூட போதிய தண்ணீர் கிடைக்காமல் நீர்வளம் குறைந்து விட்டது. இவ்வாண்டு தென்மேற்கு பருவமழையும் எதிர்பார்த்த அளவு கைகொடுக்கவில்லை. கிராமப்புறங்களில் உள்ள ஏரி, குளங்களில் தண்ணீர் இன்றி பரிதாபமாக காட்சியளிக்கிறது.

இதனால் சம்பா சாகுபடியை குறித்த நேரத்தில் துவக்க முடியாமல், விவசாயிகள் தவித்து வந்தனர். நெல் நாற்றுக்கள் முதிர்வடைந்தும், நடவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் தாமதாக துவங்கிய வடகிழக்கு பருவமழை காரணமாக விட்டு விட்டு மழை பெய்து வருகிறது.

இதனால் நீர்நிலைகள் நிரம்பும் அளவுக்கு மழையை கொடுக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து வயலை உழுது நெல் நடவுக்கு தயார்படுத்தும் பணியில் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் செய்து வருகின்றனர். வடகிழக்கு பருவமழை கைகொடுத்தால் இவ்வாண்டு சம்பா பருவ நெல் மகசூல் அதிகரித்து லாபத்தை ஈட்டித்தரும் என்று எதிர்பார்க்கின்றனர்.

## கருவேலமரங்களை அகற்ற முடிவு

மேட்டூர்: மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாய் கரையோரம் வளர்ந்துள்ள, சீமை கருவேல மரங்களை அகற்ற பொதுப்பணித்துறை தனிக்குழு அமைக்கிறது. மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாய் மூலம், சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டத்தில், 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கால்வாய் நெடுகிலும் கரையின் இருபுறமும், பெரிய சீமை கருவேல மரங்கள் காணப்படுகிறது. மாநிலம் முழுவதும் சீமை கருவேல மரங்களை அகற்ற அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மரங்களை அகற்ற, பொதுப்பணித்துறை முடிவு செய்துள்ளது. இதற்காக, கால்வாய் கரையோரம் எத்தனை மரங்கள் உள்ளது, அதன் மதிப்பீடு எவ்வளவு, என

ஆய்வு செய்து, அறிக்கை தயாரிப்பதற்காக, அதிகாரிகள் அடங்கிய குழுவை பொதுப்பணித்துறை அமைத்துள்ளது.

## ஓமலூரில் 27 மி.மீ., மழை

சேலம்: தமிழகம் முழுவதும், வட கிழக்கு பருவமழை துவங்கி உள்ளது. நேற்று முன்தினம், சேலத்தின் பல்வேறு பகுதிகளிலும் மழை வெளுத்து வாங்கியது. அதிகபட்சமாக, ஓமலூரில், 27 மி.மீ., மழை பெய்துள்ளது. தாலுகா வாரியாக பெய்த மழையளவு விவரம்(மி.மீ.,): சேலம் 14, ஏற்காடு 20.4, ஆத்தூர் 7.4, இடைப்பாடி 2.2, ஓமலூர் 27. மேட்டூர், கெங்கவல்லி, வாழப்பாடி தாலுகாவில் மழை இல்லை.

## விவசாயிகளுக்கு மதிப்பு கூட்டல் பயிற்சி

ஓமலூர்: ஓமலூரில் விவசாயிகளுக்கு, மதிப்பு கூட்டல் விற்பனை லாபம் குறித்த பயிற்சி நடந்தது. ஓமலூர் அருகே, நச்சுவானூர் பகுதியில் உள்ள, 40க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகளுக்கு, வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தில், விளைபொருளை எவ்வாறு மதிப்புக்கூட்டல் மூலம் அதிக லாபத்துடன் விற்பனை செய்வது என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் ராகி, கரும்பு, மஞ்சள் பயிர்கள் குறித்து விளக்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணி உட்பட பலர் பயிற்சி அளித்தனர்.

## தேவனாம்பாளையம் ஏரி ஆக்கிரமிப்பு: அகற்ற விவசாயிகள் வலியுறுத்தல்

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் அருகே, பழமையான தேவனாம்பாளையம் ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பள்ளிபாளையம் அருகே, பாப்பம்பாளையம் பகுதியில் தேவனாம்பாளையம் ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரி பாப்பம்பாளையம்,

மற்றும் கொக்கராயன்பேட்டை பஞ்சாயத்தில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் பாசனம் செய்வதற்கு பயன்பட்டது. 10 ஏக்கருக்கு மேல் பரப்பளவு கொண்டது, இந்த ஏரியில் இருந்து, பல பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு பாசன செய்யும் வகையில் கால்வாய் வெட்டபட்டுள்ளது. இந்த கால்வாய் மூலமும், விவசாயிகள் பாசனம் செய்தனர். தற்போது ஏரி பராமரிப்பு இல்லாமல், தூர்வாராமல் உள்ளது. ஏரியின் பல பகுதிகள் ஆக்கிரமிப்பில் உள்ளது. இதனால், ஏரியின் பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை. இப்பகுதி மக்களும் பல ஆண்டுகளாக புகார் மனு கொடுத்தும், எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

இது குறித்து, அப்பகுதியை சேர்ந்த செல்லதுரை கூறியதாவது: தேவனாம்பாளையம் ஏரி, பல ஆண்டுகளுக்கு முன், பாசன வசதி பெறுவதற்காக வெட்டப்பட்டது. காலப்போக்கில் ஏரி பராமரிப்பின்றி தூர்வாராமல், முட்செடிகள் வளர்ந்து காணப்படுகிறது. இது குறித்து, தகவல் உரிமை சட்டத்தில் கேட்டு தகவல் பெறப்பட்டதில், ஏரி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. விரைவில் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என, பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், இதுவரை அகற்றவில்லை. ஆக்கிரமிப்புகளை அகற்றினால், விவசாயம் செழிக்கும். மேலும், சுற்று வட்டார பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். இவ்வாறு அவர் கூறினார்.

## முட்டை விலை 339 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 339 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி,

மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 334 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 5 காசு உயர்த்தி, 339 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. வடமாநிலங்களுக்கு முட்டை ஏற்றுமதியும், நுகர்வும் அதிகரித்துள்ளதால், அதன் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 339, ஹைதராபாத், 315, விஜயவாடா, 310, பர்வாலா, 343, மும்பை, 355, மைசூர், 351, பெங்களூரு, 345, கோல்கத்தா, 342, டில்லி, 355. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 64 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டைக் கோழி விலையை, எவ்வித மாற்றமும் செய்யாமல் அதே நிலை நிர்ணயம் செய்யப்பட்டது. பல்லடத்தில், நடந்த உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கறிக்கோழி விலையை, மாற்றம் செய்யாமல், அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

### பருவ மழையால் நடவுபணி தீவிரம்

ஈரோடு: வடகிழக்குப் பருவமழை தமிழகத்தில், 28ம் தேதி துவங்கும் என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. இதன்படி, நேற்று முன்தினம் ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக ஈரோட்டில், 25 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. சத்தியமங்கலத்தில் 12 மி.மீ., மொடக்குறிச்சியில் 1 மி.மீ., சென்னிமலையில் 3 மி.மீ., மழை பெய்துள்ளது. இந்த மழையால், மானாவாரி நிலங்களில் குறுகிய கால பயிர்களை நடவு பணி தீவிரம் அடைந்துள்ளது.

## அழகு சேர்க்கும் 'ஆர்கிட்' மலர்கள்

கூடலூர்: கூடலூர் பகுதியில், வீடுகளுக்கு அழகு சேர்க்கும் வகையில், பலரும் 'ஆர்கிட்' மலர்களை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் வனப்பகுதியில், 'ஆர்கிட்' மலர்ச்செடிகள் அதிகம் காணப்படுகின்றன. பாறைகளில் முளைத்து வளரும் தன்மை கொண்ட இந்த செடிகள், ஈரத்தன்மை கொண்ட மரங்களிலும் வளரக்கூடியவை. இதன் மலர்கள், கண்ணை கவரும் பல வண்ணம் கொண்டவை; ஒரு வாரம் முதல், மூன்று மாதம் வரை வாடாமல் இருக்கும்.

அழகுக்காக வீடுகளில் பூச்செடிகளை வளர்க்கும் பலரும், இந்த செடிகளை விரும்பி வாங்கிச் செல்கின்றனர். இவர்களுக்கென, நீலகிரி மாவட்டத்தில், ஊட்டி, கூடலூர் உள்ளிட்ட இடங்களில், பசுமைக் குடில்களில் 'ஆர்கிட்' செடிகள் வளர்த்து விற்பனை செய்யப்படுகின்றன.

## பருவ மழை துவக்கம் குன்னூரில் கண்காணிப்பு

குன்னூர்: பருவ மழை துவங்கியதையொட்டி, குன்னூர் பகுதிக ளில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட் டுள்ளன.

குன்னூரில் நேற்று முன்தினம் முதல் அவ்வப்போது, மழை பெய்து வருகிறது. இதை தொடர்ந்து, மாவட்ட கலெக்டர் சங்கர் உத்தரவின் பேரில், குன்னூர் ஆர்.டி.ஓ., பழனிக்குமார் மேற்பார்வையில், தாசில்தார் ஜான் மனோகர்ராஜ், வருவாய் துறையினர், தீயணைப்பு துறையினர், போலீசார், நெடுஞ்சாலை துறையினர் என அனைத்து துறைகளை

சேர்ந்தவர்களும், 24 மணிநேரமும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக, குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில், ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் தகவல் தெரிவிக்க வும், நிலச்சரிவு அபாயங்களை தெரிவிக்கும் வகையில் அந்தந்த பகுதிகளில் உள்ளவர்களிடம் உடனடியாக தகவல் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிலச்சரிவு உள்ளிட்ட பேரிடர்களை தெரிவிக்க, 1077 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மேலும், குன்னூர் ஆர்.டி.ஓ., 2206002; தாசில்தார் 2206102 எண்களில் தொடர்பு கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மலைப்பகுதி விவசாயிகளே

தாண்டிக்குடி:தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் சுப்ரமணியன் அறிக்கை: தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது காபி நாற்றுக்கள் 10 ஆயிரம் எண்ணிக்கையில் வளர்க்கப்பட்டுள்ளது. மிளகு நாற்றுக்கள் தற்போது துவங்கவுள்ள பருவமழை காலத்தில் நடவு செய்ய ஏதுவாக நாற்றுக்கள் தரமாக உள்ளன. தேவையுள்ள விவசாயிகள் தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தை அணுகி பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நெல் நடவு பெண்கள் பாரம்பரிய வசூல்

வேசந்துார்:வேடசந்துார் பகுதியில் நெல் நடவு பணியில் ஈடுபட்ட பெண்கள், பொது மக்களிடையே மடியேந்தி பாரம்பரியமான முறையில் வசூலில் ஈடுபட்டனர்.வேடசந்துார் பகுதியில் ஓரளவிற்கு மழை பெய்துள்ளதால் கிணறு, போர்வெல்களில் போதிய தண்ணீர் வசதி உள்ளது. இதனால் விவசாயிகள் நெல் நடவு செய்யும் பணியில் ஈடுபட்டு

வருகின்றனர். பணியில் ஈடுபடும் பெண்கள், தங்களது பணி சிறக்கவும், நெல் நடவில் விவசாயம் சிறக்கவும், பொது மக்களிடம் பாரம்பரியமான முறையில் நாற்று கத்தைகளை ரோட்டின் குறுக்கே போட்டு, அவ்வழியே செல்பவர்களிடம், மடிப்பிச்சை கேட்பது வழக்கம். இவ்வாறான பணி வேடசந்தூர்- தமுத்துப்பட்டி ரோட்டில் உள்ள தனியார் தோட்டத்தில் நேற்று நடந்தது. . அவ்வழியே சென்ற பொது மக்கள் மனம் உவந்து தங்களிடம் உள்ளதை அவர்களுக்கு அளித்து சென்றனர்.

**விளைச்சலுக்கு தரமானவிதைகளே அவசியம்:அதிகாரி தகவல்**

திண்டுக்கல்:தமிழகத்தில் பருவ மழை துவங்கியுள்ளதால், இந்த பருவத்திற்கு ஏற்ற நல்ல மகசூல் தரக்கூடிய ரகங்களை தேர்வு செய்து விவசாயிகள் சாகுபடி செய்யலாம் என விதைச் சான்று உதவி இயக்குநர் விஜயராணி கூறினார்.அவர் கூறியதாவது: பயிர்கள் நன்கு செழித்து வளர தரமான விதை அவசியம். விவசாயிகள் விதைகள் வாங்கும் போது ரகம் மற்றும் காலாவதி நாள் ஆகியவற்றை சரிபார்த்து ரசீதுடன் வாங்க வேண்டும். அரசு கிட்டங்கிகளில் சான்று பெற்ற தரமான விதைகளை வாங்கலாம்.

அரசு விதைப் பண்ணை அமைக்க விரும்புவோர் வேளாண் விரிவாக்க மையத்திலும், தனியார் விதைப் பண்ணை அமைக்க விரும்புவர்கள் திண்டுக்கல் விதைச்சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தையும் தொடர்பு கொள்ளலாம்', என்றார். விதைச்சான்று அலுவலர் சின்னசாமி, "விவசாயிகள் விதைகள் வாங்கும் போது கடைகளில் விதைக்கான ரசீதை கேட்டு வாங்கவும்" என்றார்.

**மருதாநதி அணை திறப்பால்நான்கு கண்மாய்கள் நிரம்பின**

பட்டிவீரன்பட்டி:அய்யம்பாளையம் மருதாநதி அணை தண்ணீர் திறந்ததன் மூலம் நான்கு கண்மாய்கள் நிரம்பின. மருதாநதி அணை

கடந்த செப்டம்பரில் திறக்கப்பட்டது. கடை மடை பகுதியான சிறுவன்குளத்திற்கு 3 நாட்கள், நேரடிப் பாசனத்திற்கும், வடக்கு

வாய்க்காலுக்கும் தண்ணீர் திறந்து விடப்பட்டது. தற்போது நேரடி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் அணையின் கொள்ளளவு 63 அடியாக உள்ளது. ஒரு மாதமாக தண்ணீர் திறக்கப்பட்டதால் தாமரைக்குளம், கருங்குளம், ரங்கசமுத்திரம் கண்மாய் நிறைந்து உள்ளன.இதனைத் தொடர்ந்து தண்ணீர் சொட்டான்குளத்திற்கு செல்கிறது. தற்போது அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 40 கன அடியாக உள்ளது. அந்த நீர் அப்படியே பாசனத்திற்கு வெளியேற்றப்படுகிறது. இது குறித்து உதவி செயற்பொறியாளர் குமார் கூறுகையில்,""தொடர்ந்து மழை பெய்தால் மற்ற கண்மாய்களும் நிரப்பலாம்'' என்றார்.

## தேனிக்கு மலிவு விலை பருப்பு வராது

தேனி:தேனி மாவட்டத்தில் மொத்த கூட்டுறவு விற்பனை சங்கம் இல்லாததால், நடுத்தர குடும்பங்களுக்கு மலிவு விலையில் பருப்பு பெற முடியாத நிலை உள்ளது.

வட மாநிலங்களில் துவரம் பருப்பு விளைச்சலில் ஏற்பட்ட பாதிப்பால் தமிழகத்தில் கிலோ ரூ.220 யை எட்டியது. வெளி மார்க்கெட்டில் பருப்பு விலையை கட்டுப்படுத்த அரசு 500 டன் துவரம் பருப்பை இறக்குதி செய்து, அவற்றை மாவட்டங்களில் உள்ள நுகர்பொருள் வாணிப கழகங்கள் நடத்தும் ரேஷன் கடைகள், மாவட்ட மொத்த விற்பனை சங்கங்கள் நடத்தும் ரேஷன் கடைகள், அமுதம் அங்காடிகள் மூலம் கிலோ ரூ.110 என்ற விலையில் விற்க ஏற்பாடு செய்துள்ளது.

அரசின் இந்த அறிவிப்பால், தீபாவளி பண்டிகைக்காக வெளி மார்க்கெட்டில் துவரம் பருப்பு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியதில்லை என நடுத்தர குடும்பங்கள் மகிழ்ச்சி அடைந்தன.

இந்த மகிழ்ச்சி தேனி மாவட்ட மக்களுக்கு கிடைக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் அரசு கொள்முதல் செய்யும் மலிவு விலை துவரம் பருப்பு மாவட்டங்களில் உள்ள மாவட்ட நுகர்பொருள் கூட்டுறவு மொத்த விற்பனை சங்கங்கள் நடத்தும் ரேஷன் கடைகள், நுகர்பொருள் வாணிப கழகம் நடத்தும் ரேஷன் கடைகள் மூலமே விற்பனைக்கு வரும் என அரசு அறிவித்துள்ளது.அரசு அறிவித்த இரு கூட்டுறவு அமைப்புகளும் தேனி மாவட்டத்தில் இல்லை. தேனி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை சங்கம், 1997ல் கூட்டுறவு சங்கங்களிடம் இருந்த பங்கு தொகை பெற்று ரூ.5.20 லட்சத்தில் துவங்கப்பட்டது.

துவங்கிய ஒரு ஆண்டிலேயே மூடப்பட்டும் விட்டது. நுகர்பொருள் வாணிப கழகம் நடந்தும் ரேஷன் கடைகளும் இல்லை.

இதனால் தேனி மாவட்டத்தில் அரசு அறிவித்துள்ள மலிவு விலை பருப்பு விற்பனைக்கு வர வாய்ப்பு இல்லை என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனவே, அரசின் மலிவு விலை பருப்பு தேனி மாவட்ட மக்களுக்கு கிடைக்கும் வகையில், ஏதாவது ஒரு கூட்டுறவு அமைப்பிற்கு சிறப்பு அனுமதி வழங்கி துவரம் பருப்பு விற்பனை செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர்.

## தேனி மாவட்டத்தில் வாழை சாகுபடி மீண்டும் சரிவு: விலை குறைவால் விவசாயிகள் கடும் அதிருப்தி

தேனி:தேனி மாவட்டத்தில் கடந்த ஓராண்டாக திசு வாழைக்கு கட்டுபடியான விலை கிடைக்காததால், கடும் அதிருப்தி அடைந்துள்ள விவசாயிகள், வாழை சாகுபடிØ ய தவிரத்து வருகின்றனர். இதனால், வாழை சாகுபடி பரப்பளவு மீண்டும் சரிந்துள்ளது.

தேனி மாவட்டத்தில் திசுவாழை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வந்தனர். கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை நன்கு பெய்ததால், மாவட்டத்தில் 9,000 எக்டேரில் வாழை சாகுபடி செய்யப்பட்டிருந்தது. அந்த நிலங்களில் அறுவடை செய்யப்பட்ட திசுவாழை விலை வீழ்ச்சியடைந்தது.

குறைந்தபட்சம் திசுவாழைப்பழம் கிலோ 9 ரூபாய்க்கு மேல் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுவதில்லை. ஆனால், சில்லரை மார்க்கெட்டில் கிலோ 30 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறது. தற்போது விலை குறைந்திருந்தாலும் இன்னும் சில மாதங்களில் இதன் விலை அதிகரிக்கும் என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகிறார்கள். ஆனாலும், விவசாயிகள் வாழை சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டவில்லை.

இந்நிலையில், இந்தாண்டு சொட்டுநீர் பாசனம் மூலம் வாழை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

நடப்பு ஆண்டு அக்., 28 வரை மாவட்டத்தில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பு 4525 எக்டேராக குறைந்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவு.

இதனால் ஆண்டு இறுதிக்குள் 10 ஆயிரம் எக்டேரிலும், வரும் 3 ஆண்டுகளுக்குள் 30 ஆயிரம் எக்டேரிலும் வாழை சாகுபடி செய்ய வேண்டும் என்ற தோட்டக்கலைத்துறையின் திட்டம் கனவாகி உள்ளது. வாழைப்பழத்தையும், வாழைத்தார், வாழை நாரை மூலப்பொருளாக கொண்டும் பல்வேறு பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தேனி மாவட்டத்தில் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் நடந்து வரும் நிலையில், வாழை சாகுபடி செய்யப்படும் பரப்பளவு குறைந்து வருவதால், இத்திட்டங்களுக்கும் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதேபோல், மற்ற காய்கறிகளின் சாகுபடி பரப்பும் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு அக்டோபரில் 400 எக்டேராக இருந்த வெங்காயம் சாகுபடி பரப்பளவு நடப்பு ஆண்டு 275 எக்டேராகவும், 275 எக்டேராக இருந்த கத்தரிசாகுபடி பரப்பளவு தற்போது 125 எக்டேராகவும் சரிந்து விட்டது.

இன்னும் சில நாட்களில் தேனி மாவட்டத்தில் காய்கறி சாகுபடி பாதிப்பு ஏற்பட்டு விலைகள் உயரும் வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

### மரக்கன்றுகள் நடும் விழா

கீழக்கரை:கீழக்கரை அருகே உள்ள மாயாகுளம், புல்லந்தையில் அப்துல்கலாம் நினைவாக வனத்துறை சார்பில் 2 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. வேம்பு, புளி, தேக்கு, நீர்மருந்து, ஆவி, புங்கை உள்ளிட்ட மரக்கன்றுகளை புல்லந்தை முன்னறிஞ்சான் ஊரணி, கோயில், பள்ளிக்கூடங்கள் உள்ளிட்ட இடங்களில் வைக்கப்பட்டது. ஊராட்சித்தலைவர் சுந்தரராஜ் தலைமை வகித்தார். ஒன்றியக் கவுன்சிலர் சரஸ்வதி பாக்கியநாதன், கிராமத்தலைவர் காந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மஞ்சள் நிலா ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவர் ஆனந்தராஜ், துணைத்தலைவர் ராஜ்குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். வனச்சரகர் கர்ணன் நன்றி கூறினார்.

### மானாமதுரையில் கடற்பாசியில் இயற்கை முறையில் உரம் தயாரிப்பு

மானாமதுரை:மானாமதுரை சிப்காட் தொழிற்பேட்டையில் 2008ம் ஆண்டு தொடங்கப்பட்ட "அக்வா அக்ரி பிராசசிங்' நிறுவனம் இன்று தினமும் நான்கு டன் உரம் தயாரித்து விற்பனைக்கு அனுப்பி

வருகிறது.ராமநாதபுரம் மாவட்டம் பாம்பனில் இருந்து மீனவ தொழிலாளர்களிடம் கடற்பாசி கொள்முதல் செய்யப்பட்டு மானாமதுரைக்கு கொண்டு வரப்படுகிறது. இதனை பக்குவப்படுத்த உணவு பொருளில் பயன்படுத்தப்படும் பதப்படுத்திகள் மூலம் திரவ உரம் மற்றும் திட உரம் தயாரிக்கப்படுகிறது.

இங்கு தயாரிக்கப்படும் உரங்கள் வாழை, நெல், சோளம், பயறு வகைகள்,காய்கறிகள், பருத்தி, பழ மரங்கள்,பூ செடிகள் ஆகியவற்றிற்கு பயன்படுத்தலாம்,முற்றிலும் இயற்கை முறையில் தயாரிப்பதால் செடிகள்,மரங்கள் ஆகியவற்றின் காய்க்கும் திறன்,பூக்கும் திறன் அதிகரித்துள்ளது.இங்கு தயாரிக்கப்படும் உரங்களை இந்தியாவில் உள்ள 44 விவசாய பல்கலைக்கழகங்கள் அங்கீகரித்துள்ளன. எட்டு கிலோ கொண்ட திட உர பாக்கெட் 490 ரூபாய் எனவும், ஒரு லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவ உரம் 640 ரூபாய் எனவும் விற்பனை செய்யப்படுகிறது.

## வனப்பகுதியில் பலத்த மழை:குடிநீர் தேக்கத்திற்கு நீர் வரத்து

ராஜபாளையம்:ராஜபாளையம் வனப்பகுதியில் நேற்று முன்தினம் பெய்த பலத்தமழையால் கோடைகால குடிநீர் தேக்கத்திற்கு நீர் வரத்து அதிகரித்து உள்ளது. இதை தொடர்ந்து தேக்கத்தின் நீர்மட்டம் 14 அடியாக உயர்ந்து உள்ளது.மேற்கு தொடர்ச்சி மலையில் தொடர்மழை பெய்யும்போது அங்குள்ள சிற்றாறுகள் மூலம் அய்யனார்கோயில் ஆற்றிற்கு மழைநீர் வரும். இப்பகுதியில் தடுப்பணை அமைத்து கோடைகால குடிநீர் தேக்கத்திற்கு நிலத்தடி பைப் லைன் மூலம் மழைநீர் வந்துசேர்கிறது. தேக்கம் உயரம் 23 அடியாக இருந்தபோதிலும் நீர் கசிவு, பலவீனமாக இருப்பதால் 18 அடி உயரம் தான் நீர் சேமிக்கப்படுகிறது.

ராஜபாளையத்திற்கான கோடை கால குடிநீர் தேவையை இந்த சேமிப்பு நீர் தான் கைகொடுக்கும்.

நேற்று முன்தினம் நள்ளிரவு மேற்கு தொடர்ச்சி மலையில் பலத்த மழை பெய்ய, அய்யனார்கோயில் ஆற்றில் நீர்வரத்து அதிகமானது. தேக்கத்திற்கு 2 அடி நீர் வந்து கொண்டு இருக்கிறது. நீர் மட்டம் 14 அடி ஆகயாக உயர்ந்து உள்ளது. இது போல் பராமரிப்பில்லாத புதிய தேக்கத்திலும் தண்ணீர் சேமிக்கப்படுகிறது. *நேற்று மாலை ராஜபாளையம் நகரிலும் சாரல், மழை என நான்கு மணி நேரம் பெய்தது. இதனால் நகர் பகுதியிலும் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

## கம்பளி பூச்சி பாதித்த கடலை பயிரில் ஆய்வு

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை அருகே கம்பளி பூச்சியால் பாதித்த கடலை பயிர்களை,"தினமலர்' செய்தி எதிரொலியாக வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

அருப்புக்கோட்டை செம்பட்டி, மேட்டு தொட்டியான்குளம், குறிஞ்சாக்குளம், இலங்கிபட்டி, கட்டங்குடி, மணவராயநேந்தல் உள்ளிட்ட கிராமங்களில் 20 ஆயிரம் ஏக்கரில் கடலை பயிர் பயிரிடப்பட்டுள்ளது. பயிர்கள் நன்கு வளர்ந்தவுடன் கம்பளி பூச்சி பரவி செடிகளை அழித்து விடுகின்றன. ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வரை செலவழித்து பயிரிடப்பட்ட கடலை செடி அழிவதை கண்டு விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

அதிகாரிகள் குழு:இதுகுறித்தான செய்தி நேற்று முன்தினம் "தினமலர்' நாளிதழில் வெளியானது. இதை தொடர்ந்து அருப்புக்கோட்டை கோவிலாங்குளம் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் பால்பாண்டி, விருதுநகர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் கனகராஜ், வேளாண் உதவி இயக்குனர் மணிசேகரன் மற்றும் களப்பணியாளர்கள் தொட்டியாங்குளம் சென்று பயிர்களை ஆய்வு செய்தனர். கம்பளி புழுக்களை ஒழிப்பது தொடர்பாக விவசாயிகளுக்கு விளக்கினர்.

ஒவ்வொரு கிராமங்களுக்கும் குழுவாக சென்று கம்பளி புழுக்களை அழிப்பது பற்றி செயல் விளக்கம் அளித்தனர்.

## நெல்லையில் தொடர் மழை அணைகளின் நீர்மட்டம் உயர்வு

திருநெல்வேலி: நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துவருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வடகிழக்கு பருவமழை பெய்துவருகிறது. துவக்கத்திலேயே அடைமழையைப்போல விடிய விடிய பெய்கிறது. நேற்று காலை எட்டு மணிநிலவரப்படி, ஆய்க்குடியில் அதிகபட்சமாக 80.2 மி.மீ.,மழை பதிவாகியது. தென்காசியில் 60, பாபநாசம் அணைப்பகுதியில் 53 மழையளவு பதிவாகியது. மாவட்டம் முழுவதும் மழை பெய்துள்ளது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 602.55 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 117 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 113 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 72.26 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு 35 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு விநாடிக்கு 25 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு விநாடிக்கு 15.43 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

நீர்மட்டம் உயர்வு:

பாபநாசம் அணை 71.90 அடி, சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்வுக்கு பிறகு 86.22 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 62.10 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 58 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 2.50 அடி உயர்ந்து 58.50 அடியாகவும், கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 58.73 அடியாகவும்,

வடக்குப் பச்சையாறு அணையின் நீர்மட்டம் 84.75 அடியாகவும் இருந்தது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வடகிழக்குப் பருவ மழை தொடக்கம் - மீனவர்களுக்கு காரைக்கால் மீனவளத் துறை அறிவுறுத்தல்**

இலங்கை அருகே காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியிருப்பதால், மீனவர்கள் கடலுக்குள் குறுகிய தூரம் செல்லும்படியும், படகுகளை பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கும்படியும் மீன்வளத் துறை அறிவுறுத்தியுள்ளது.

காரைக்கால் மீன்வளத்துறை துணை இயக்குநர் (பொ) ந.இளையபெருமாள் வியாழக்கிழமை கூறியது : வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளது. இலங்கை அருகே வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியிருப்பதால், அடுத்த 2 நாள்கள் மழை இருக்குமென வானிலை ஆய்வு மையம் கூறுகிறது.

காரைக்கால் பகுதி மீனவர்கள் இக்காலத்தில் கடலில் ஆழ்கடல் பகுதிக்கு செல்லாமல், குறுகிய தூரத்திற்கு மட்டுமே சென்று மீன்பிடிக்க முன்வரவேண்டும். மாவட்டத்தின் கடலோரங்களில் நிறுத்திவைத்திருக்கும் படகுகளை, பாதுகாப்பான பகுதிக்கு கொண்டுசென்று நிறுத்தவேண்டும். ஒட்டுமொத்த மீனவர்களும் பருவமழை காலத்தில் உரிய விழிப்புணர்வுடன் செயல்படவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

## மாமல்லபுரத்தில் பலத்த மழை: சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்தது

மாமல்லபுரத்தில் வியாழக்கிழமை பலத்த மழை பெய்ததால், சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்து காணப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டை அடுத்த சர்வதேச சுற்றுலா தலமான மாமல்லபுரத்தில் புராதானச் சின்னங்களைக் காண நூற்றுக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில், வியாழக்கிழமை பெய்த பலத்த மழையால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. சுற்றுலா பயணிகள் அதிகம் வந்து செல்லும் கடற்கரை கோயில், ஐந்து ரதம், அர்சுணன் தபசு உள்ளிட்ட இடங்கள் வெறிச்சோடி காணப்பட்டன

## பயிர் இழப்பால் 41 விவசாயிகள் தற்கொலை: விசாரணையை தொடங்கியது ஒடிஸா அரசு

ஒடிஸா மாநிலத்தில் பயிர் இழப்பு காரணமாக, இதுவரை 41 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதற்கான பின்னணி, காரணங்களை அறிய மாநில அரசு முறைப்படியான விசாரணையை தொடங்கியுள்ளது.

இதுதொடர்பாக மாநில சிறப்பு நிவாரண ஆணையர் ஜி.வி.வி.சர்மா, புவனேசுவரத்தில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

ஒடிஸாவில் 15 மாவட்டங்களில், இதுவரை 41 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

தற்கொலைக்கான உண்மையான காரணங்களை தற்போது கூற இயலாது. எனினும் முறைப்படியான விசாரணையை அரசு தொடங்கியிருக்கிறது. தற்கொலை தொடர்பான அறிக்கையை அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள், அரசிடம் ஏற்கெனவே சமர்ப்பித்துவிட்டனர்.

மாநிலத்தில் 21 மாவட்டங்களில் வறட்சி நிலை காரணமாக, சுமார் 33

சதவீதத்துக்கும் மேலாக பயிர் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள் மானியம் வழங்கப்படும்.

கடன் சுமையால் தற்கொலை நடந்திருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே உள்ளூர் கந்து வட்டிக்காரர்களைக் கண்காணிக்குமாறு காவல் துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தகுந்த உரிமம் இன்றி கிராமங்களில் செயல்படும் தனியார் நிதி நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சர்மா எச்சரிக்கை விடுத்தார்.

இதற்கிடையே, கடனை திரும்பச் செலுத்துமாறு விவசாயிகளுக்கு நெருக்கடி தர வேண்டாம் என்று வங்கிகளை மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

இதனிடையே, வறட்சி தொடர்பான உயர்நிலை ஆலோசனைக் கூட்டம் புவனேசுவரத்தில் தலைமைச் செயலர் ஜி.சி.பதி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நபார்டு வங்கி, ரிசர்வ் வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கி மற்றும் பிற வங்கிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள பயிர்க் கடன்கள், அரசு மேற்கொண்டு வரும் நிவாரணப் பணிகள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

கரீஃப் பருவக் கடனை திரும்பச் செலுத்துமாறு வற்புறுத்தாமல், ரபி பருவத்துக்கான வேளாண் கடனை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முன்னதாக வழங்குமாறு வங்கிகளை ஜி.சி.பதி கேட்டுக் கொண்டார்.

## முதல்வரின் வரலாற்றுக் கடமை

தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லை கடந்து மீன் பிடித்தால் ரூ.15 கோடி அபராதம் விதிப்பதற்கான சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள இருப்பதாக இலங்கை அரசின் மீன்வளத் துறைத் தலைமை இயக்குநரான பெர்னாண்டோ எச்சரித்துள்ளார்.

இலங்கைக்கு இந்தியப் பிரதமர் மோடி சென்று அந்நாட்டுத்

தலைவர்களுடன் சுமுகமாகப் பேசிவிட்டுத் திரும்பிய இரண்டே நாட்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைபவர்களைச் சுடும் உரிமை தங்கள் கடற்படைக்கு உண்டு என எச்சரித்தார்.

சின்னஞ்சிறிய நாடான இலங்கையின் பிரதமர் முதல் அதிகாரிவரை மிரட்டுவதற்கு தமிழக மீனவர்கள் செய்த தவறுதான் என்ன?

தமிழ்நாட்டின் இராமேசுவரம் முதல் நாகப்பட்டினம் வரை 540 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையில் சுமார் மூன்று இலட்சம் மீனவர்கள் வாழ்கிறார்கள். 800 விசைப்படகுகள் உள்ளிட்ட 7,000 படகுகளில் மீன்பிடிக்கிறார்கள்.

எதிர்க்கரையில் இலங்கையின் தலைமன்னாரில் தொடங்கி காங்கேயன்துறை வரை 800 கி.மீ. கடற்கரையில் மூன்று இலட்சம் தமிழ் மீனவர்கள் வாழ்ந்தார்கள். ஆனால், போருக்குப் பிறகு இப்போது 75,000 மீனவர்கள் மட்டுமே வாழ்கிறார்கள். 150 விசைப்படகுகள் உள்பட 800 படகுகளில் மீன்பிடிக்கிறார்கள்.

தமிழகக் கடலில் உள்ள மீன்களும் இலங்கைக் கடற்பகுதிக்குள் உள்ள மீன்களும் சுதந்திரமாக, தங்கு தடையின்றி அங்கும் இங்கும் சென்று வருகின்றன. அவற்றைத் தடுப்பாரில்லை. அதைப்போல இருபுறத்திலும் வாழும் மீனவர்களும் தடையின்றி அங்கும், இங்கும் சென்று பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தொழில் நடத்தி வந்துள்ளனர்.

தமிழ் நாட்டு மீனவர்களும் ஈழத் தமிழ் மீனவர்களும் காலங் காலமாக கொண்டும் கொடுத்தும் உறவாடி வந்தவர்கள். திருமண உறவுகள் இன்னமும் தொடர்கின்றன. கடந்த பல நூறாண்டு காலத்தில் இவர்களுக்குள் எத்தகைய மோதலும் நிகழ்ந்தது இல்லை. தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்றால் சில வேளைகளில் எதிர்க்கரையில் உள்ள நெடுந்தீவு போன்ற தீவுகளில் தங்கி ஓய்வு எடுத்துவிட்டுத் திரும்புவார்கள்.

அதேபோல ஈழத்தமிழ் மீனவர்களும் தமிழ்நாட்டில் வேதாரண்யம்,

நாகை போன்ற ஊர்களின் கடற்கரைகளில் தங்கி இளைப்பாறிவிட்டுத் திரும்புவார்கள். எந்தவொரு காலக்கட்டத்திலும் இவர்களுக்குள் மீன்பிடித்தலை அடிப்படையாக் கொண்ட மோதல்கள் நடைபெற்றதே கிடையாது.

ஆனால், 1950-களில் இலங்கை இரப்பர் தேயிலைத் தோட்டங்களில் வேலை தேடுவதற்காக படகுகள் மூலம் சென்ற தமிழ்நாட்டுத் தமிழர்களை கள்ளத்தோணிகள் என அழைத்து இலங்கைக் கடற்படைச் சுட்டுக்கொல்லத் தொடங்கியது. காங்கேயன்துறை, காரைநகர், தலைமன்னார், கற்பிட்டி ஆகிய இடங்களில் சிங்களக் கடற்படைத் தளங்கள் அமைக்கப்பட்டன. அதிலிருந்து தமிழர்களைத் துயரம் துரத்தத் தொடங்கியது.

கடந்த 30 ஆண்டுகளில் இலங்கை அரசின் தமிழின ஒழிப்புக் கொள்கையின் விளைவாக மீன்பிடித்தடை விதிக்கப்பட்டது. ஈழத் தமிழ் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்ல முடியவில்லை. சென்றால் இலங்கைக் கடற்படை அவர்களைச் சுடும். அதைப்போல தமிழ்நாட்டு மீனவர்களையும் சிங்களக் கடற்படை வேட்டையாடத் தொடங்கிற்று. 750க்கு மேற்பட்ட தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். 2,000க்கும் மேற்பட்டோர் அங்ககீனம் ஆனார்கள். தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான பல நூறு கோடி ரூபாய் பெறுமான படகுகள், வலைகள் ஆகியவை சேதமாக்கப்பட்டன.

1983}ஆம் ஆண்டு கொழும்பு இனக் கலவரத்திற்குப் பிறகு தமிழகத்திற்குப் படகுகள் மூலம் தப்பிவர முயன்ற ஆயிரக்கணக்கான ஈழத்தமிழ் அகதிகளை இலங்கைக் கடற்படை மூழ்கடித்துக் கொலை செய்தது. அதிலிருந்து தப்பித் தமிழகத்தின் கரைகளுக்கு வந்து சேர்ந்த அகதிகளின் படகுகளை இந்திய அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். நூற்றுக்கணக்கான படகுகள் இயற்கையின் சீற்றங்களுக்கு இரையாகி சிதிலமடைந்து யாருக்கும் பயன்படாமல் கிடக்கின்றன.

ஈழத் தமிழரை ஒடுக்கினோம். இனி தமிழ்நாட்டு தமிழர்களையும்

ஒடுக்குவோம் என்பதுதான் இலங்கைப் பிரதமர் முதல் அதிகாரி வரை விடும் எச்சரிக்கையின் பொருளாகும்.

இந்தியாவைச் சுற்றியுள்ள அண்டை நாடுகளான மியான்மார், பாகிஸ்தான், வங்கதேசம், மாலத்தீவு போன்ற நாடுகள் எல்லைமீறி வரும் இந்திய மீனவர்களைச் சுடுவோம் என ஒருபோதும் மிரட்டியதில்லை. அதைப்போல மேற்கண்ட நாடுகளின் மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்தால் சுடுவோம் என இந்தியக் கடற்படையும் அவர்களை ஒருபோதும் அச்சுறுத்தியதில்லை. உலகில் எந்தவொரு நாட்டிலும் எல்லைத் தாண்டிவரும் மீனவர்களைச் சுடுவதோ, பிடித்துச் சித்திரவதைச் செய்வதோ நடைபெறுவதே இல்லை.

மன்னார் கடலுக்கு அப்பால் இலங்கையின் தென்கிழக்குக் கோடியில் இரண்டு இலட்சம் வரையிலான சிங்கள மீனவர்கள் வாழ்கிறார்கள். கன்னியாகுமரிக்குத் தெற்கே இந்தியக் கடல் எல்லைக்குள் சிங்கள மீனவர்களின் இழுவைக் கப்பல்கள் மீன்பிடிக்கின்றன. ஆண்டு தோறும் அக்கடலில் ஆறு கோடி ரூபாய்களுக்கு மேல் பெறுமான மீன்களை சிங்களர்கள் அள்ளிச் செல்கின்றனர். ஆனால், இந்தியா ஒருபோதும் அதைத் தடுத்ததில்லை.

1974-ஆம் ஆண்டு இந்திய-இலங்கை உடன்பாடு இருநாடுகளுக்கிடையே எல்லைக்கோடு மற்றும் அதன் தொடர்புடைய பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக மட்டும் செய்யப்படவில்லை. பாக் வளைகுடாவில் காலங்காலமாக மீன்பிடித்து வரும் இரு நாட்டு மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது இந்த உடன்பாட்டின் முக்கிய அம்சமாகும். இந்த அடிப்படையில்தான் கச்சத்தீவை இலங்கைக்கு இந்தியா விட்டுக்கொடுத்தது. இலங்கை நம்பிக்கைத் துரோகம் இழைத்து தமிழக மீனவர்களைத் தொடர்ந்து வேட்டையாடி வருகிறது.

1976-ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியா - இலங்கைக்கிடையே மற்றொரு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, 1974-ஆம் ஆண்டு உடன்பாட்டின்படி, தமிழக மீனவர்களுக்கு

வழங்கப்பட்ட உரிமைகள் பறிக்கப்பட்டதாக இலங்கை கூறத்தொடங்கியது.

ஆனால், சட்டப்படி அது சரியல்ல. உடன்பாட்டின் ஆறாம் பிரிவில் இலங்கை மற்றும் இந்திய கலங்கள், இரு நாட்டு கடலிலும் இதுவரை காலங்காலமாக அனுபவித்துவந்த அனைத்து உரிமைகளையும் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. எனவே இந்திய-இலங்கை மீனவர்கள் அனுபவித்து வரும் மீன்பிடி உரிமை எந்த வகையிலும் மாற்றப்படவோ, திருத்தப்படவோ, குறைக்கப்படவோ இல்லை என்பது தெளிவாகும்.

நாடுகளுக்கிடையேயான 1969-ஆம் ஆண்டு வியன்னா உடன்பாட்டில் உள்ள 60(1) விதியின்படி, இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்பாட்டின் முக்கியமான அம்சம் என்பது ஒரு நாட்டினால் மீறப்படும்போது மற்ற நாட்டிற்கு அந்த உடன்பாட்டை முழுமையாக இரத்து செய்யவோ, தற்காலிகமாகவே நிறுத்தி வைப்பதற்கோ இயலும். எனவே 1974, 1976 உடன்பாடுகளை முறித்துக்கொள்ளவும் கச்சத்தீவினைத் திரும்பப்பெறவும் இந்தியாவிற்குச் சட்டப்படி உரிமை உண்டு.

பாக் வளைகுடா, மன்னார் வளைகுடா ஆகியவற்றில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படை சுட்டுக்கொன்ற நிகழ்ச்சிகள் இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் தண்டிக்கத் தக்க குற்றமாகும். அவற்றை விசாரிக்கவும், தண்டனை வழங்கவும் இந்திய நீதிமன்றங்களுக்கு அதிகாரம் உண்டு.

இந்தியத் தண்டனைச் சட்டம் 4-ஆவது பிரிவில், நாட்டிற்கு வெளியே நடக்கும் குற்றங்களைத் தண்டிக்கும் வகை கூறப்பட்டுள்ளது. இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பல் அல்லது விமானம் ஆகியவற்றுக்கு எதிராக எந்த நாட்டினாலும் எந்த இடத்திலும் குற்றம் இழைக்கப்பட்டாலும் அவர்களைத் தண்டிக்க இந்திய நீதிமன்றங்களுக்கு உரிமை உண்டு எனக் கூறப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, அரபிக் கடல் பகுதியில் இத்தாலியக் கடற்படையைச்

சேர்ந்த மாலுமிகள் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட படகில் சென்றவர்களைச் சுட்டுக்கொன்றதற்காக கைது செய்யப்பட்டு வழக்குப் பதிவுசெய்யப்பட்டதும் இதன் அடிப்படையில்தான்.

சிங்களக் கடற்படையால் 750-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோதிலும்கூட இந்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கொல்லப்பட்ட மீனவர்களுக்கு நட்ட ஈடு வாங்கித் தரவுமில்லை.

5,000 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட இலங்கைக் கடல் எல்லைக்குள் 150 சதுர கி.மீ. பரப்பளவு மட்டுமே தமிழக மீனவர்கள் எல்லைத் தெரியாமல் சென்று மீன்பிடிக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் ஆண்டுதோறும் தமிழகத்திற்குக் கொண்டு வரும் மீன், இறால் ஆகியவை ரூபாய் ஒரு கோடிக்குமேல் பெறாது. ஆனால், இலங்கையின் மீன்வளத்தையே தமிழக மீனவர்கள் சுரண்டுகிறார்கள் என சிங்கள அரசு பொய்க்குற்றம் கற்பித்து, தனது அட்டூழியங்களை நியாயப்படுத்த முயல்கிறது. ரூ.15 கோடி அபராதம் விதிக்கப் போவதாக மிரட்டுகிறது.

தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை அரசின் இந்த அட்டூழியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், பாராமுகமாக உள்ள இந்திய அரசின் நிலைப்பாட்டை மாற்றவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும், அதிகாரமும் தமிழக முதல்வருக்கு உள்ளன.

போர்க் குற்றங்களுக்கு சர்வதேச நீதி விசாரணை, ஈழத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு, மீனவர்கள் பிரச்னைக்கு மனித நேய அடிப்படையில் தீர்வு ஆகிய மூன்று பிரச்னைகள் குறித்து தமிழக சட்டப் பேரவையிலும் இலங்கை வடக்கு மாகாண சபையிலும் ஒரே மாதிரியான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில், தமிழக முதல்வர் ஜெயலலிதா, வடக்கு மாகாண முதல்வர் விக்னேசுவரனை அழைத்துப் பேசி இருவருமாக மேற்கண்ட மூன்று பிரச்னைகள் குறித்து கூட்டறிக்கை வெளியிடவேண்டும்.

அவ்வாறு செய்வது அழிவின் விளிம்பில் நின்று தத்தளிக்கும் ஈழத் தமிழர்களுக்கும் தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் புதிய நம்பிக்கையை ஊட்டும்.

ஈழத் தமிழர்களும் தமிழக மீனவர்களும் தனித்துவிடப்படவில்லை. அவர்களுக்கு ஆதரவாக ஏழரைக் கோடி தமிழ் மக்களும் திரண்டு நிற்கிறார்கள் என்பது உலகத் தமிழர்களுக்கும் உற்சாகமூட்டும். மேற்கு வங்க முதல்வரும், வங்கதேச பிரதமரும், இந்தியாவில் உள்ள பஞ்சாப் முதல்வரும் பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் முதல்வரும் வெவ்வேறு நாட்டினர் ஆயினும், மொழி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தொப்புள்கொடி உறவு பூண்டவர்கள் என்ற முறையில் இணைந்து பிரச்னைகளைப் பேசித் தீர்த்துக்கொண்டனர். அத்தீர்வை இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும், வங்க தேச அரசும் ஏற்றுக்கொண்டன. இது வரலாற்று உண்மையாகும். ஈழத் தமிழர்கள் உள்பட உலகெங்கும் வாழ்கிற தமிழர்கள் தாய்த் தமிழகத்தைத்தான் நம்பியிருக்கிறார்கள். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் தாயாக நின்று, தமிழ் மக்களுக்கு ஆற்ற வேண்டிய மகத்தான கடமையைச் செய்து, வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெறுமாறு முதல்வர் ஜெயலலிதாவை வேண்டிக்கொள்கிறேன்.

## "பிளாஸ்டிக் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது அவசியம்'

பிளாஸ்டிக் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு மாநகராட்சி நிர்வாகம் முன்னுரிமை அளிப்பது அவசியம் என்றார் மாமன்ற ஆளும் கட்சித் தலைவர் சத்தியநாராயணா.

பெங்களூரு மாநகராட்சியில் வியாழக்கிழமை நடைபெற்ற மாமன்ற மாதாந்திரக் கூட்டம் மேயர் மஞ்சுநாத் ரெட்டி தலைமையில் நடைபெற்றது. இதில் சத்தியநாராயணா பேசியது:

பெங்களூரு மாநகராட்சியில் பிளாஸ்டிக்கை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. இதை செயல்படுத்துவதற்கு

முன்னதாக பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, உற்பத்தியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யவும் மாநகராட்சி முன்வர வேண்டும்.

மாநகரில் அதிக அளவில் குப்பைகள் குவிவதற்கு பிளாஸ்டிக் முக்கியக் காரணமாக விளங்குகிறது. பிளாஸ்டிக்கைத் தடை செய்வதன் மூலம் 30 சதம் குப்பைகள் குறைய வாய்ப்புள்ளது என்றார்.

**நாளை மீனவர்கள் குறைகேட்புக் கூட்டம்**

மீனவர்கள் குறைகேட்புக் கூட்டம் சனிக்கிழமை நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மாவட்ட மீனவர்கள் குறைகேட்புக் கூட்டம் ஆட்சியரகத்தில் அக்டோபர் 30-ஆம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இக்கூட்டம் சில நிர்வாக காரணங்களுக்காக 31-ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன்படி, மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள குறைகேட்புக் கூட்டரங்கில் இக்கூட்டம் காலை 10.30 மணிக்கு நடைபெறுகிறது. இதில் மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்களும் பங்கேற்பதால் மாவட்டத்துக்கு உள்பட்ட மீனவர்கள் கலந்துகொண்டு தங்களது குறைகளைத் தெரிவித்து, அதற்கான தீர்வைப் பெறலாம் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**கீழச்செருவாயில் 44 மி.மீ. மழை**

மாவட்டத்தில் 2-ஆவது நாளாக கீழச்செருவாயில் அதிகபட்சமாக மழை பெய்தது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் மேல் அடுக்கு சுழற்சியினால் கடலோர மாவட்டங்களில் கூடுதல்

மழைப்பொழிவு இருக்குமென வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனினும், வியாழக்கிழமை மாவட்டத்தில் மிதமான மழையே பெய்தது.

புதன்கிழமை மாவட்டத்தில் அதிகபட்சமாக கீழச்செருவாயில் 55 மில்லி மீட்டர் மழை பதிவாகியிருந்தது. இதேபோன்று வியாழக்கிழமை காலை 8 மணி நிலவரப்படியான 24 மணி நேரத்தில் கீழச்செருவாயில் 44 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்): கொத்தவாச்சேரி 14, காட்டுமன்னார்கோவில், வானமாதேவி தலா 7, லால்பேட்டை 6.8, குப்பநத்தம் 5.2, பரங்கிப்பேட்டை, ஸ்ரீமுஷ்ணம் தலா 5, விருத்தாசலம் 4, கடலூர் 3.8, பெலாந்துறை 3, புவனகிரி, பண்ருட்டி தலா 1.

## விளாத்திகுளம் வட்டத்தில் மழை பாதிப்பு புகார் தெரிவிக்க எண்கள் அறிவிப்பு

வடகிழக்கு பருவ மழையினால் ஏற்படும் சேதத்தை தடுக்க விளாத்திகுளம் வட்டத்துக்குள்பட்ட அனைத்து பகுதிகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என வருவாய்த் துறையினர் தெரிவித்தனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதால், விளாத்திகுளம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை முதல் மழை பெய்து வருகிறது. வேம்பார் முதல் தருவைகுளம் வரையிலான கடலோரப் பகுதிகளில் பல இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. மழையினால் சேதம் ஏற்படுவதைத் தடுக்க வருவாய்துறையினர் சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

இதுகுறித்து, வட்டாட்சியர் செல்வகுமார் கூறுகையில், மழை சேதங்கள் தொடர்பான நிவாரணப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இரவு பணியாளர்கள்

இரண்டு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். மழை பாதிப்புகளினால் ஏற்படும் சேதம் குறித்து எந்த நேரத்திலும் பணியாளர்களிடம் தகவல் தெரிவிக்கலாம். உடன் நடவடிக்கை எடுக்கப்படும். அதிக மழையால் கண்மாய், குளங்கள், ஊரணிகளில் உடைப்பு ஏற்பட்டால் மற்றும் மழை பாதிப்பு தொடர்பான புகார்களுக்கு வட்டாட்சியர் அலுவலக தொலைபேசி எண்கள் 04638 - 233126, 233149 மற்றும் 9445000686 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**எட்டயபுரம் பகுதியில் மழை**

எட்டயபுரம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை பரவலாக மழை பெய்தது. கடந்த சில நாள்களாக இப்பகுதியில் முற்பகலில் கடுமையான வெப்பமும், பிற்பகலில் வானம் மேகமூட்டத்துடன் இருந்து வந்தது. இந்நிலையில் வியாழக்கிழமை காலையிலிருந்தே வெப்பத்தின் தாக்கம் அதிகளவில் காணப்பட்டது. பிற்கலில் திடீரென மழைபெய்யத் தொடங்கியது. சுமார் 15 நிமிடங்கள் நீடித்துப் பெய்த இந்த மழையினால் வெப்பத்தின் தாக்கம் சிறிது குறைந்தது. இதேபோல சிந்தலக்கரை, நாவலக்கம்பட்டி, ஈரால், இளம்புவனம் உள்ளிட்ட பகுதிகளிலும் மாலை நேரத்தில் ஆங்காங்கே தூரல் விழுந்தது. தொடர்ந்து மாலை நேரத்தில் வெப்பம் குறைந்து, குளிர்ச்சி நிலவியதால் எட்டயபுரம் பகுதி பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**நீர்வள ஆதார பாதுகாப்பு பயிற்சி முகாம்**

தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் நீர்வள ஆதாரங்கள் பாதுகாப்பு குறித்த பயிற்சி முகாம் 7 நாள்கள் நடைபெற்றது.

தில்லியில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நிதியுதவியுடன் தூத்துக்குடி காமராஜ் கல்லூரி வேதியியல் துறை சார்பில், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர், மாணவிகளுக்கான நீர்வள பாதுகாப்பு மற்றும் மேம்பாடு குறித்த பயிற்சி மற்றும் வழிமுறைப்படுத்தும் முகாம் கடந்த 20 ஆம் தேதி தொடங்கி 7 நாள்கள் நடைபெற்றது.

திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துக்குள்பட்ட 15 கல்லூரிகளில் இருந்து 100 மாணவர், மாணவிகள் பயிற்சி முகாமில் கலந்துகொண்டனர். முகாமையொட்டி பல்வேறு தலைப்புகளில் நடைபெற்ற கருத்தரங்கில் நீர்வள ஆதாரங்களின் பாதுகாப்பு குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இதையடுத்து, செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிறைவு விழாவில், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக ஆட்சிக்குழு மற்றும் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினரான பேராசிரியர் கோவிந்தராஜு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமில் பங்கேற்ற மாணவர், மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கிப் பேசினார்.

நிகழ்ச்சியில், காமராஜ் கல்லூரி முதல்வர் து. நாகராஜன், இயக்குநர் சக்திவேல், வேதியியல் துறைத் தலைவர் சுகிர்தாதேவி, முகாம் ஒருங்கிணைப்பாளர் வான்மதி, பேராசிரியர்கள் கனகவேல், ரகுகுமார், அருண்பிரசாத்லிங்கம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### நவ.3-இல் வேளாண் இலவசப் பயிற்சி முகாம்

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் நவம்பர் 3-ஆம் தேதி வேளாண் காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்தல் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இதுகுறித்து பயிற்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்தி: இப் பயிற்சி முகாமில், வேளாண் காடுகளின் முக்கியத்துவம், வகைகள், வேளாண் காடுகளில் வளர்க்கக்கூடிய வணிக ரீதியான மர வகைகள், தீவன மரங்கள், பழ மரங்கள், தீவனப் பயிர்கள் சாகுபடி இவற்றுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்தல் குறித்த விரிவான பயிற்சி அளிக்கப்படும். மேலும், மர வகைகளில் நாற்று உற்பத்தி குறித்த செயல்விளக்கப் பயிற்சியும் அளிக்கப்படும். இப் பயிற்சி முகாமில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள்,

ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது 04286 - 266345, 266244 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவோ வரும் நவம்பர் 2-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"கோழிப்பண்ணை தொடங்க கடனுதவி அளிக்கப்படும்'**

அரியலூர் மாவட்டத்தில் கோழிப்பண்ணை தொடங்க முன்வருபவர்களுக்கு அனைத்து வகை கடன் உதவிகளும் ஏற்பாடு செய்து தரப்படும் என்றார் ஆட்சியர் எ.சரவணவேல்ராஜ்.

அரியலூர் மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்பு துறையின் கோழிப்பண்ணையினை புதன்கிழமை பார்வையிட்ட அவர் மேலும் பேசியது:

அரியலூர் மாவட்டத்தில் 5,000 அலகு கறிக்கோழிகள் பண்ணை 25% அரசு மானியத்தில் அமைக்கும் திட்டம் உள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற தகுதியான விவசாயிகள், தனிநபர் தொழில் முனைவோர் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். இப்பண்ணை அமைவிடம் கிராம மக்கள் குடியிருப்பு தவிர்த்த, காற்றோட்டமான மேடான பகுதியாகவும், விண்ணப்பதாரரின் குடும்ப உறுப்பினருக்கு சொந்தமான இடமாகவும் இருக்க வேண்டும்.

கறிக்கோழிப் பண்ணை தொழிலின் சிறப்பம்சம் குறைந்த முதலீடு மற்றும் குறைந்த காலத்தில் (6-8 வாரம்) வருமானம். ஆண்டுக்கு குறைந்தது 5 முறை கோழிக்குஞ்சுகள் பெற்று வளர்க்கலாம்.

கடந்த 2012-13 ஆம் ஆண்டு 50 நபர்களுக்கு கோழிவளர்க்க ரூ.1.03 கோடி மதிப்பிலும், 2013-14 ஆம் ஆண்டு 25 பேருக்கு ரூ. 51 லட்சம்

மதிப்பிலும், 2014-15 ஆம் ஆண்டு 50 பேருக்கு ரூ. 80 லட்சம் மதிப்பிலும் கடனுதவி வழங்கி கோழி வளர்ப்பினை ஊக்குவித்து மேம்படுத்தி வருகிறோம்.

5,000 கோழிக்குஞ்சுகளுக்கு கோழிக்கு ஒரு சதுர அடி வீதம் 5,000 சதுர அடி பண்ணை கொட்டகை அமைத்திட சதுர அடிக்கு ரூ. 200 வீதம் உத்தேச செலவீனம் ரூ. 10 லட்சமும் உபகரங்களுக்கு ரூ 0.75 லட்சமும் ஆக மொத்தம் ரூ.10.75 லட்சம் மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், 25% அரசு மானியம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகை வங்கி கடனுதவியாக ஏற்பாடு செய்து தரப்படும் என அவர் தெரிவித்தார்.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் குறித்த பயிலரங்கு**

புதுகையில் நபார்டு வங்கி சார்பில் புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கான உழவர் உற்பத்தியாளர் நிறுவன குறித்த பயிலரங்கம் அண்மையில் நடைபெற்றது.

பயிலரங்கை மாவட்ட வேளாண் துறை இணை இயக்குநர் த. சந்திரசேகரன் தொடக்கி வைத்துப் பேசியது: சிறு, குறு விவசாயிகள் தற்போது எதிர்கொள்ளும் சிரமங்களைத் தவிர்க்க உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் பெரிதும் உதவும் என்றார். உழவர்கள் ஆயிரம் பேர் இணைந்து உற்பத்தியாளர் நிறுவனத்தைத் தொடங்கலாம். தொடர்ந்து இடுபொருட்கள் விற்பனை மையத்தை தொடங்கி, தனது உறுப்பினர்களுக்கு குறைந்த விலையில், தரமான இடுபொருட்களை வழங்குவதின் மூலம் விற்பனையாளர்களாகவும் மாறலாம், கம்பெனியே உறுப்பினர்கள் உற்பத்தி செய்த பொருட்களை கொள்முதல் செய்து, தரம்

பிரித்து, மதிப்புக்கூட்டி, சந்தைப்படுத்துவதின் மூலம், கூடுதல் விலை பெற முடியும் என்றார். தற்போது மாவட்டத்தில் 3 உழவர் உற்பத்தியாளர் கம்பெனிகள் இயங்கி வருவதாகவும், அவை நன்கு செயல்பட்டு, மாநிலத்தில் முன்மாதிரி உற்பத்தியாளர் கம்பெனியாக வளர வாழ்த்துவதாகவும் தெரிவித்தார். புதுக்கோட்டை நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி அதிகாரி எஸ். சோமசுந்தரம் பேசுகையில், நபார்டு வங்கியானது புதுகை, பெரம்பலூர், அரியலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் 10 புதிய உற்பத்தியாளர் கம்பெனிகளை தொடங்குவதற்கான ஆயத்தப்பணிகள் நடைபெறுவதாக குறிப்பிட்டார்.

வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை துணை இயக்குநர் அப்துல்நசீர் பேசும்போது, தற்போது செயல்படும் 3 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு மத்திய மாநில அரசுகளின் மூலம் கிடைக்கும் பலன்களைக் குறிப்பிட்டார். ஓய்வுபெற்ற வேளாண் துறை இணை இயக்குநர் ஷாஜகான், மாவட்ட முன்னோடி வங்கி அதிகாரி சுலைமான், நபார்டு வங்கியின் திருச்சி, பெரம்பலூர் மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் சுரேஷ்குமார், நவீன், விவசாயிகள் உள்பட 100 க்கும் மேல்பட்டோர் கலந்து கொண்டனர்.

**"வேளாண் துறை மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது'**

வேளாண் துறையில் பட்டம் பெறும் மாணவர்களுக்கு உலக நாடுகளில் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது என்றார் ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் கே. வரதராஜன்.

பெரம்பலூர் தண்ணீர்பந்தல் அருகேயுள்ள ரோவர் பொறியியல் கல்லூரிக் கூட்டரங்கில், ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு நிறுவனத்தின் முதலாமாண்டு பட்டமளிப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது. விழாவில், 31 மாணவர்களுக்கு இளநிலை வேளாண்மை பட்டமும், சான்றிதழ்களும் வழங்கிய அவர் மேலும் பேசியது:

நாட்டின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு விவசாயமும், அதைச் சார்ந்த தொழில்களின் வளர்ச்சியும் இன்றியமையாதது. வேளாண்மைத் துறையில் பட்டம் பயிலும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு உலக நாடுகளில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. உணவு பாதுகாப்பு, அதை அடைவதற்கான வழிமுறைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். விவசாயம், சமூக முன்னேற்றத்தில் மாணவர்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்றார் அவர்.

**திருத்தணியில் பலத்த மழை**

திருத்தணியில் வியாழக்கிழமை பலத்த மழை பெய்தது.

திருத்தணியில் கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது.

இந்நிலையில், திருத்தணியில் வியாழக்கிழமை பலத்த மழை பெய்தது. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

திருத்தணி ம.பொ.சி. சாலை சிண்டிகேட் வங்கி அருகில் கழிவு நீர் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டதால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அதேபோல், இரண்டாவது ரயில்வே கேட், மூன்றாவது ரயில்வே கேட்டுக்குச் செல்லும் சாலையில் மழை நீர் குளம்போல் தேங்கியதால் மக்கள் நடந்து செல்ல சிரமப்பட்டனர்.

**மாலையில், பள்ளிகள் விடும் நேரத்தில் மழை**

பெய்ததால் நனைந்தவாறே மாணவ, மாணவிகள் வீட்டுக்குச் சென்றனர். மழையைத் தொடர்ந்து, குளிர்ந்த காற்று வீசியதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**திருவள்ளூரில் மிதமான மழை**

திருவள்ளூர் மாவட்டத்தில் மிதமான அளவே மழை பெய்தது.

கடந்த சில ஆண்டுகளாக திருவள்ளூர் மாவட்டத்தில் பருவமழை பொய்த்து வருவதால் மாவட்டத்தில் உள்ள ஏரிகள், குளங்கள் வறண்டு மேய்ச்சல் நிலமாக மாறி வருகின்றன. இதையொட்டி ஆக்கிரமிப்பும் அதிகளவில் நடைபெற்று வருகிறது. விளை நிலங்கள் பெரும்பாலானவை வீட்டு மனைகளாக மாறி வருகின்றன.

திருவள்ளூரைச் சுற்றியுள்ள பகுதிகளின் நிலத்தடி நீர்மட்ட உயர்வுக்கு காரணமான பூண்டி ஏரியும் வரலாறு காணாத வகையில் வறண்டு காணப்படுகிறது.

இந்நிலையில், எதிர்பார்த்தபடி மழை பெய்யாததால் மக்கள் ஏக்கத்தில் உள்ளனர். திருவள்ளூர் மாவட்டத்தில் மழை அளவு (மில்லி மீட்டரில்): பொன்னேரி, ஊத்துக்கோட்டை, கும்மிடிப்பூண்டி பகுதிகளில் 1 மில்லி மீட்டரும், திருவள்ளூர்-7, பூந்தமல்லி-9, அம்பத்தூர்-9, பூண்டி-7, செம்பரம்பாக்கம்-10, சோழவரம்-28, தாமரைப்பாக்கம்-5, ஆர்.கே.பேட்டை-15, செங்குன்றம்-25 என மழை பதிவாகியுள்ளது.

**கோத்தகிரியில் பசுந்தேயிலை விலை கடும் வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை**

கோத்தகிரியில் பசுந்தேயிலையின் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனைக்குள்ளாகியுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், கூடலூர் ஆகிய பகுதிகளில் காய்கறி விவ சாயம் 90 சதவீதமும், தேயிலை விவசாயம் 10 சதவீதமும்

நடைபெற்று வருகிறது. கோத்தகிரியில் 10 சதவீதம் காய்கறியும், 90 சதவீதம் தேயிலையும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இதனால், கோத்தகிரி பகுதி விவசாயிகளின் பொருளாதாரம் தேயிலையை மட்டுமே நம்பியுள்ளது. இந்த நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கடும் வறட்சி நிலவியதால் பசுந்தேயிலை மகசூல் குறைந்தது.

இதனால் பசுந்தேயிலையின் விலை தர வரிசைப்படி ஏ கிரேடு கிலோ ரூ. 16 முதல் ரூ. 20 வரையும், பி கிரேடு ரூ. 12 முதல் ரூ. 16 வரையும், சி கிரேடு ரூ. 8 முதல் ரூ. 12 வரையும் விற்பனையானது. இந்த விலை ஓரளவிற்கு விவசாயிகளுக்கு கட்டுபடியானதாக இருந்தது.

இந்த நிலையில், கடந்த சில வாரங்களாக பருவ மழை பெய்து வந்ததால் பசுந்தே யிலை மகசூல் அதிகரித்தது. இதனால், தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலையின் வரத்து அதிகரித்தது. இதன் காரணமாக தொழிற்சாலை உரிமையாளர்கள், தேயிலை முகவர்கள் சிண்டிகேட் அமைத்து பசுந்தேயிலையின் விலையை கணிசமாக குறைத்துள்ளனர். அதன்படி தற்போது ஏ கிரேடு பசுந்தேயிலை கிலோ ரூ. 12 முதல் ரூ. 16, பி கிரேடு ரூ. 8 முதல் ரூ. 12, சி கிரேடு ரூ. 6 முதல் ரூ. 8 என கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த விலை நிலவரம் தேயிலை விவசாயிகளை கடும் சிரமத்திற்குள்ளாக்கியுள்ளது.

மேலும், விவசாயிகளிடமிருந்து பசுந்தேயிலையை வாங்க தொழிற்சாலை உரிமையாளர்கள் மறுப்பதாகவும் கூறப்படுகிறது.

இதன் காரணமாக விவசாயிகள் பலர் பசுந்தேயிலையை பறிக்காமல் செடியிலேயே விட்டு விடுகின்றனர். இதனால், அவை தற்போது முற்றிய இலைகளாக மாறிவருகின்றன.

இதுகுறித்து, தேயிலை விவசாயிகள் கூறியது: பசுந்தேயிலைக்கு ஏ,பி,சி எனத் தரம் பிரித்து விலை நிர்ணயம் செய்யாமல் ஒரே ரகம், ஒரே விலை என விலை நிர்ணயம் செய்ய தேயிலை வாரிய இயக்குநர் நடவடிக்கை எடுக்கவேண்டும். தற்போது விலை வீழ்ச்சியால் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்கி உதவிட வேண்டும் என்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## நாடு முழுவதும் அதிரடி சோதனை 1¼ லட்சம் டன் துவரம் பருப்பு பறிமுதல்



புதுடெல்லி,

இந்தியா முழுவதும் துவரம் பருப்பு விலை சமீபத்தில் வரலாறு காணாத வகையில் திடீரென அதிகரித்து மக்களை திக்குமுக்காட வைத்தது. ஒரு கிலோ ரூ.250 வரை உயர்ந்ததால் ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவர்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளானார்கள்.

இதையடுத்து பருப்பு பதுக்கல்காரர்கள் மீது மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுத்தது. நாடு முழுவதும் நடத்தப்பட்ட அதிரடி சோதனையில் இதுவரை 1¼ லட்சம் டன் பருப்பு பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் அதிகாரிகளின் சோதனைக்கு பயந்து பதுக்கல்காரர்கள் அவசரமாக சந்தைக்கு பருப்பு மூட்டைகளை அனுப்பி வருகின்றனர். இதனால் பருப்பு விலை சற்று குறைய தொடங்கி உள்ளது. ரூ.20 ஆயிரத்துக்கு விற்ற துவரம்பருப்பு மூட்டை தற்போது ரூ.17 ஆயிரமாக குறைந்துள்ளது.

## வடகிழக்கு பருவமழை தீவிரம்: தமிழகத்தில் மழை நீடிக்கும் வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு




சென்னை,

தமிழ்நாடு, வடகிழக்கு பருவமழை காலத்தின்போதுதான் அதிக மழைப்பொழிவை பெறுகிறது.வடகிழக்கு பருவமழை தீவிரம்

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை நேற்று முன்தினம் தொடங்கியது. வங்கக்கடலில் இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த பகுதி உருவானதால் தமிழகத்தில் வட கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் சில இடங்களிலும் அன்று மழை பெய்தது.

இந்த மழை தீவிரம் அடைந்து உள்ளது. நேற்றும் பல இடங்களில் மழை பெய்தது. சென்னை நகரில் நேற்று காலையில் இருந்தே வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. காலை 10 மணி முதல் 11 மணி வரை எழும்பூர், வேப்பேரி, புரசைவாக்கம், தியாகராய நகர், அடையாறு, திருவான்மியூர் உள்ளிட்ட பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது. மழையின் காரணமாக எழும்பூர் ரெயில் நிலையம், தியாகராய நகர் உள்ளிட்ட இடங்களில் சாலைகளில் தண்ணீர் தேங்கியது. தாம்பரம் உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும் மழை பெய்தது.

தஞ்சை மாவட்டம்

தஞ்சை, திருவாரூர், நாகை, கன்னியாகுமரி உள்ளிட்ட பிற மாவட்டங்களிலும் மழை பெய்தது.

தஞ்சை மாவட்டத்தில் நேற்று 3-வது நாளாக மழை பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் வல்லம், குருங்குளம், திருவையாறு, பூதலூர், திருக்காட்டுப்பள்ளி, கல்லணை, ஒரத்தநாடு, நெய்வாசல் தென்பாதி, வெட்டிக்காடு, குருங்குளம், பாபநாசம், அய்யம்பேட்டை, திருவிடைமருதூர் உள்பட பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. தஞ்சையில் நேற்று மதியம் சுமார் 1 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

நாகை மாவட்டத்தில் பூம்புகார், வாணகிரி, கீழமூவர்க்கரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. நாகை மற்றும் பூம்புகாரில் கடல்சீற்றத்துடன் காணப்பட்டது.

திருவாரூர் மாவட்டத்தில் கூத்தாநல்லூர், வடபாதிமங்கலம், லெட்சுமாங்குடி, பூதமங்கலம், பொதக்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்தது.வெள்ளத்தில் சிக்கி முதியவர் சாவு குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு பிறகு நாகர்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது. இதேபோல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர் மழை பெய்தது. இதனால் அணைகளின் நீர்மட்டம் கிடு, கிடுவென உயர்ந்து வருகிறது. அணைகளுக்கு நீர்வரத்தும் அதிகரித்து உள்ளது.அருமனை அருகே தொட்டிகோட்டு கோணம் பகுதியை சேர்ந்த மதுசூதனன் (வயது 67) என்பவர் குழித்துறை தாமிரபரணி ஆற்றில் உள்ள தரைப்பாலத்தை கடந்து பஸ் நிறுத்தத்திற்கு செல்ல முயன்றார். தரைப்பாலத்தை மூழ்கடித்தப்படி சென்ற வெள்ளம் மதுசூதனனை இழுத்துச் சென்றது. இதனால் அவர் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக இறந்தார். பின்னர் அவரது உடல் மீட்கப்பட்டது.

குமரி மாவட்டத்தில் மழையினால் 25 வீடுகள் இடிந்து விழுந்தன.

மதுரை, விருதுநகர், சிவகாசியில் நேற்று லேசான மழை பெய்தது.

இன்றும் நீடிக்கும். இதற்கிடையே, இலங்கை அருகே நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை மறைந்து, மேலடுக்கு சுழற்சியாக நீடிக்கிறது. இதனால் தமிழ்நாட்டில் இன்றும் (வெள்ளிக்கிழமை) மழை நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களிடம் கூறியதாவது:-

ஓரிரு இடங்களில் கனமழை

வங்கக்கடலில் இலங்கை அருகே நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தற்போது மறைந்து மேலடுக்கு சுழற்சியாக நீடிக்கிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்து

உள்ளது.

இந்த மேலடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் இன்று பெரும்பாலான இடங்களில் மழை பெய்யும்.

ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். உள் மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும். சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் மழை பெய்யும்.

அரபிக்கடலில் புயல்

அரபிக்கடலில் புதிதாக புயல் ஒன்று உருவாகி இருக்கிறது. அதற்கு 'சபாலா' என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது. இந்த புயல் ஓமன் நாட்டின் சலாலா நகரில் இருந்து 1,150 கிலோ மீட்டர் தூரத்தில் கிழக்கு மற்றும் தென் கிழக்கில் உள்ளது. இந்த புயல் ஓமன்-ஏமன் கடற்கரையை நோக்கி நகரும். இந்த புயல் காரணமாக தமிழகத்திற்கு எந்த தாக்கமும் இல்லை. இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் கூறினார்.மேலடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் கடலோர பகுதிகளில் இன்று மணிக்கு 55 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதால், கடலுக்கு மீன்படிக்கச் செல்லும் மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் வானிலை மையம் அறிவித்து உள்ளது.

மழை அளவு

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

மயிலாடி, ஆயிக்குடி தலா 8 செ.மீ., பேச்சிப்பாறை 7 செ.மீ., தென்காசி, விருதுநகர் தலா 6 செ.மீ., பாளையங்கோட்டை, பாபநாசம், இரணியல், சிவகிரி, வால்பாறை தலா 5 செ.மீ., சாத்தூர், அரண்மனை புதூர்,

துவாக்குடி, பொள்ளாச்சி, குடவாசல், குளச்சல் தலா 4 செ.மீ., பெரியாறு அணை, ஸ்ரீவைகுண்டம், ஆலங்காயம், குழித்துறை, கே.பரமத்தி, சோழவரம், நாகர்கோவில், மணப்பாறை, ஓமலூர், உத்தமபாளையம், செங்குன்றம், கன்னியாகுமரி தலா 3 செ.மீ., செங்கோட்டை, தக்கலை, திருக்காட்டுப்பள்ளி, மாயனூர், சங்கரன்கோவில், இலுப்பூர், ராஜபாளையம், வெம்பாவூர், ஏற்காடு, கும்பகோணம், பூதப்பாண்டி, போடிநாயக்கனூர், கோவில்பட்டி, தாளவாடி, பாம்பன், சென்னை நுங்கம்பாக்கம், வலங்கைமான் தலா 2 செ.மீ. மழை பெய்து உள்ளது. மேலும் சென்னை விமான நிலையம் உள்பட 50-க்கும் மேற்பட்ட இடங்களில் தலா 1 செ.மீ. மழை பதிவாகி இருக்கிறது.

## பொள்ளாச்சியில் ஒரே நாளில் 80 மி.மீ. மழை பெய்தது விவசாயிகள் மகிழ்ச்சி



பொள்ளாச்சியில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 80 மி.மீ மழை பதிவானது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>வடகிழக்கு பருவமழை</u>

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை நேற்று முன்தினம் தொடங்கியது. இதனால் பரவலாக பல இடங்களில் பலத்த மழை பெய்தது. கோவை மாவட்டத்திலும் பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்தது. கடந்த சில நாட்களாக வெயில் அடித்ததால் நீண்ட நாட்களுக்கு பிறகு மழை பெய்ததால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

வால்பாறை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலும் நேற்று முன்தினம் மழை பெய்தது. இரவு விடிய, விடிய மழை பெய்தது. இதன் காரணமாக வால்பாறை பகுதிகளில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. வால்பாறை பகுதியில் உள்ள ஆறுகளில் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது.

பொள்ளாச்சியில் 80 மி.மீ மழை

நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பதிவான மழை அளவு விவரம் பின்வருமாறு:–

சோலையார் –16.மி.மீ, பரம்பிக்குளம் 3 மி.மீ., ஆழியாறு –32.4 மி.மீ., திருமூர்த்தி–1 மி.மீ., அமராவதி 16 மி.மீ., அப்பர்நீரார் 14 மி.மீ., லோயர் நீரார் 14 மி.மீ., வால்பாறை 5 மி.மீ., பொள்ளாச்சி 80 மி.மீ., மணக்கடவு ரூ.30.6 மி.மீ., தூணக்கடவு – 7 மி.மீ., பெரிவாரிப்பள்ளம் 12 மி.மீ., அப்பர் ஆழியார் 5 மி.மீ., நெகமம் 30 மி.மீ., காடம்பாறை 2 மி.மீ., நல்லாறு 2 மி.மீ., நவமலை 4.2 மி.மீ., சர்க்கார்பதி 28 மி.மீ.

விவசாயிகள் மகிழ்ச்சி

தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கியதை தொடர்ந்து பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுவட்டார விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். அடுத்து என்ன பயிர் சாகுபடி செய்யலாம் என்று சக விவசாயிகளிடமும், வேளாண் அதிகாரிகளிடமும் ஆலோசனை செய்து வருகிறார்கள்.

## கருங்கல்பாளையம் சந்தையில் 900 எருமை –பசு மாடுகள் விற்பனை



ஈரோடு

கருங்கல்பாளையம் சந்தையில் 900 எருமை மற்றும் பசு மாடுகள் நேற்று விற்பனை ஆனது.

<u>மாட்டுச்சந்தை</u>

ஈரோடு கருங்கல்பாளையத்தில் உள்ள மாட்டுச்சந்தை வாரந்தோறும் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த சந்தைக்கு 200 வளர்ப்பு கன்று குட்டிகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இது குறைந்தபட்ச விலையாக ரூ.2 ஆயிரத்துக்கும், அதிகபட்ச விலையாக ரூ.8 ஆயிரத்துக்கும் விற்பனையானது. இவற்றை பல்வேறு இடங்களில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் வாங்கிச்சென்றனர்.

நேற்று வழக்கமான சந்தை நடந்தது. இதற்கு நேற்று முன்தினம் இரவே விவசாயிகள் தங்களது மாடுகளை வாகனங்களில் கொண்டு வரத்தொடங்கினார்கள். ஈரோடு, சேலம், கரூர், திருப்பூர், நாமக்கல்,

கம்பம், மதுரை, தேனி, கோவை போன்ற பகுதிகளில் இருந்து மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தன.

900 மாடுகள் விற்பனை

500 எருமை மாடுகள், 500 பசுமாடுகள் என மொத்தம் 950 மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் எருமை மாடு ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.18 ஆயிரத்துக்கும், அதிகபட்ச விலையாக ரூ.34 ஆயிரத்துக்கும் விற்பனையானது. பசுமாடு ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.16 ஆயிரத்துக்கும், அதிகபட்ச விலையாக ரூ.32 ஆயிரத்துக்கும் விற்பனையானது. நேற்று மொத்தம் 900 பசு மற்றும் எருமை மாடுகள் விற்பனையானது.

இதைத்தவிர தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும், மராட்டியம், ஆந்திரா, கர்நாடகா, கோவா போன்ற வெளி மாநிலங்களில் இருந்தும், ஏராளமான வியாபாரிகள் வந்து இருந்தனர். இவர்கள் மாடுகளை விலைக்கு வாங்கி, லாரிகள் மற்றும் சரக்கு வாகனங்களில் ஏற்றிச்சென்றனர்.

## கோத்தகிரி பகுதியில் கேரட் விளைச்சல் அமோகம்



கோத்தகிரி,

கோத்தகிரியில் கேரட் விளைச்சல் அமோகமாக உள்ளது.

<u>கேரட்</u>

கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான கீழ்கோத்தகிரி, அரவேனு, கட்டபெட்டு உள்பட பல்வேறு இடங்களில் தேயிலைக்கு அடுத்தப்படியாக மலைத்தோட்ட காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. உருளைகிழங்கு, கேரட், முட்டை கோஸ், காலிபிளவர் உள்பட பல்வேறு காய்கறி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு விதைத்த கேரட் தற்போது நன்கு விளைந்து, அதிக மகசூலை தந்துள்ளன. கேரட் விளைச்சல் அமோகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதைத்தொடர்ந்து விவசாயிகள் அறுவடை செய்த கேரட்டுகளை சுத்தம் செய்து, தரம் பிரித்து ஊட்டி, மேட்டுப்பாளையம் பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வருகிறார்கள்.இதனை இங்கு வரும் சுற்றுலா பயணிகளும் விரும்பி வாங்கி செல்கிறார்கள். இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

மகிழ்ச்சி

கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் தற்போது கேரட் விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனை நாங்கள் அறுவடை செய்து எந்திரம் மூலமும், கைகளாலும் சுத்தம் செய்து தரம் பிரித்து விற்பனைக்கு அனுப்பி வைக்கிறோம். ஒரு சில இடங்களில் வியாபாரிகளே நேரில் வந்து வாங்கி செல்கிறார்கள்.தற்போது ஒரு கிலோ கேரட் ரூ.25 முதல் ரூ.30 வரை விலை கிடைக்கிறது. இந்த விலை கட்டுப்படியான விலை என்பதால் மகிழ்ச்சியாக உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## மசினகுடியில் இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு பேரணி



மசினகுடி,

மசினகுடியில் இயற்கை உணவு பொருட்கள் மற்றும் இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. மசினகுடி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இருந்து தொடங்கிய பேரணியை ஊட்டி சமூக சேவா சங்கத்தின் இயக்குனர் அந்தோணிசாமி தொடங்கி வைத்தார். பேரணி மசினகுடி பஸ் நிலையம் வழியாக சென்று இந்திரா நகர் காலனியில் நிறைவடைந்தது. இதில் பள்ளி மாணவ–மாணவிகள், பொதுமக்கள் பலர் கொண்டனர். பின்னர் நடந்த கருத்தரங்கில் இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை உணவின் பயன்கள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. கருத்தரங்கில் மசினகுடி ஊராட்சி மன்ற தலைவர் பவுசியா, சமூக சேவா சங்க திட்ட இயக்குனர் சுப்ரபா, ஒருங்கிணைப்பாளர் அமுதா, பள்ளி தலைமை ஆசிரியர் ரவிக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தொடர் மழை எதிரொலி: பெரம்பலூர் மாவட்டத்தில் ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு




பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருவதையொட்டி ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தொடர்மழை

பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஏரி, குளம், குட்டைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அரணாரை நீலியம்மன் ஏரி, பெரம்பலூர் பெரியஏரி, வெள்ளந்தாங்கி அம்மன் ஏரி, துறைமங்கலம் பெரிய ஏரி, ஆலந்துரைஅம்மன் ஏரி ஆகிய 5 ஏரிகள் உள்ளன.

இதில் வெள்ளந்தாங்கி அம்மன் ஏரியில் 50 சதவீதமும், துறைமங்கலம் ஏரியில் 25 சதவீதமும் நீர்தேங்கி உள்ளது. பெரம்பலூர் பெரிய ஏரிக்கு நீர்வரத்து வாய்க்கால்கள் இதுவரை தூர்வாரி சீரமைக்கப்படாததால் மழை நீர்வரத்து பாதிக்கப்பட்டுள்ளது. துறைமங்கலம் நீலத்தடி நீர்மட்டத்திற்கு ஆதாரமான துறைமங்கலம் பெரிய ஏரிக்கு மருதையாற்றில் இருந்து நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

துறைமங்கலம் பெரிய ஏரி கடந்த 2004–ம் ஆண்டு சுனாமி புயல் மழையின் போதும், 2011–ன் போதும் முழுமையாக நிரம்பியது. தற்போது சீமைக்கருவேலமரங்கள் பெரிய ஏரியை முழுமையாக ஆக்கிரமித்துள்ளன. எளம்பலூர் சாலை–ரோஸ்நகர் பகுதியில்களில்

இருந்து வரும் மழைநீர் வடிகால் வாய்க்கால் வழியாகவும் மழைநீர் துறைமங்கலம் ஏரிக்கு வந்தடைகிறது. மேலும் வெள்ளந்தாங்கி அம்மன் ஏரியில் இருந்து 2 வாய்க்கால் மூலம் துறைமங்கலம் ஏரிக்கு உபரி நீர்வந்தடைகிறது.

தூர்வாரகோரிக்கை

நீர்வரத்து வாய்க்கால்களை பருவமழை வலுவடையும் முன்னதாக தூர்வாரி சீரமைக்கவேண்டும் என்றும், ஏரியில் படர்ந்துள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றிட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பெரம்பலூர் நகரில் உள்ள ஏரிப்பாசன விவசாயிகள் பொதுப்பணித்துறையினருக்கும், மாவட்ட கலெக்டருக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர். பெரம்பலூர் நகரில் உள்ள ஏரிகளின் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தால், ஏரியை சார்ந்து கிணற்று பாசனம் மூலம் விவசாயிகள் மேற்கொள்ளும் பயிர்சாகுபடிக்கு வாய்ப்பாகவும் பல ஆயிரக்கணக்கில் பதிக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளுக்கும், நகராட்சி பொதுக்கிணறுகளுக்கும் நீர்ஊற்றெடுக்க பெரிதும் துணையாக இருக்கும் என பொதுநல அமைப்பினர் தெரிவித்தனர்.

## நெற்பயிர்கள் கருகிய நிலையில் மஞ்சளாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி




தேவதானப்பட்டி

தேவதானப்பட்டி அருகே நெற்பயிர்கள் கருகிய நிலையில் மஞ்சளாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

உபரிநீர் நிறுத்தப்பட்டது

தேனி மாவட்டம் தேவதானப்பட்டி பகுதியில் உள்ள மஞ்சளாறு அணை மூலம் சுமார் 3 ஆயிரத்து 148 ஏக்கர் நிலமும், திண்டுக்கல் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 111 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறுகிறது. இதில் புதிய ஆயக்கட்டு பாசன பரப்பு(வலது பிரதான கால்வாய்) 1,873 ஏக்கர், பழைய ஆயக்கட்டு பாசன பரப்பு 3 ஆயிரத்து 386 ஏக்கர் ஆகும்.

ஆண்டு தோறும் முதல்போக சாகுபடிக்காக அக்டோபர் மாதம் 15–ந் தேதி அணை திறக்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டு செப்டம்பர் கடைசி வாரம் மற்றும் அக்டோபர் முதல் வாரத்தில் பெய்த மழையால் அணை முழு கொள்ளளவை எட்டியது. இதையடுத்து அணைக்கு வந்த உபரி நீரை அக்டோபர் 10–ந் தேதி முதல் முழுமையாக வெளியேற்றி வந்தனர்.

பின்னர் படிப்படியாக மழையளவு குறைந்ததால் உபரிநீர் வெளியேற்றப்படுவது நிறுத்தப்பட்டது. இந்நிலையில் கடந்த 10 நாட்களுக்கு முன்பு பெரியகுளத்தில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் மஞ்சளாறு அணை பாசன விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது.

அணை திறக்கப்படவில்லை

அப்போது அணை அக்டோபர் 26–ந் தேதி திறக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாநில அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன் பேரில் அணையின் புதிய ஆயக்கட்டு பகுதிகளான தேவதானப்பட்டி தெற்குவெளி, டி.வாடிப்பட்டி, அட்டணம்பட்டி, புல்லக்காபட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 600 ஏக்கர் பரப்பளவில் புழுதி நெல் விதைத்து, உபரி நீரை பாய்ச்சி தற்போது நெல் சாகுபடி செய்யப்பட்டது.

அந்த நெல் முளைத்து தற்போது 15 நாள் பயிராக உள்ளது. இதற்கிடையே உபரி நீர் வெளியேற்றப்படுவது நிறுத்தப்பட்ட நிலையில் அணை 26–ந் தேதி திறக்கப்படும் என்று விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால் அணை திறக்கப்படவில்லை. இதனால் 600 ஏக்கரில் பரப்பளவில் விதைக்கப்பட்டு முளைத்துள்ள நெற்பயிர் தண்ணீர் இல்லாமல் கருகும் நிலை உருவானது.

56.80 அடி

இதனால் விவசாயிகள் மிகுந்த கவலை அடைந்தனர். ஆனால் அவர்களுடைய கவலையை தீர்க்கும் வகையில் நேற்றுமுன்தினம் மஞ்சளாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தது. இதனால் அணைக்கு வினாடிக்கு 96 கனஅடி வீதம் தண்ணீர் வருகிறது. அணையின் பாதுகாப்பு கருதி 56.80 அடி மட்டுமே நீர் தேக்கி வைக்கப்படுகிறது.

அதற்கு மேலாக வரும் தண்ணீர் முழுமையாக வெளியேற்றப்படுகிறது. இதனால் கருகிய நிலையில் இருந்த புழுதி நெல் விதைப்பு பயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. எனவே தற்போது பெய்த மழை அந்த பகுதி விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

## பரவலாக மழை அதிகபட்சமாக குடவாசலில் 36 மி.மீ. பதிவானது



திருவாரூர் மாவட்டத்தில் 2-வது நாளாக பரவலாக மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக குடவாசலில் 36 மி.மீட்டர் மழை பதிவானது.

2-வது நாளாக மழை

வடகிழக்கு பருவ மழை தொடங்கி தற்போது மழை பெய்து வருகிறது. மேலும் இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக கடலோர மாவட்டங்களில் மழை பெய்ய தொடங்கும் என வானிலை மையம் அறிவித்துள்ளது. அதன்படி திருவாரூர் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. 2-வது நாளாக நேற்று காலை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் தொடர்ந்து மழை பெய்தது.

திருவாரூர் மாவட்டத்தில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு விவரம் (மிமீட்டர்)வருமாறு:-

திருவாரூர்-3, குடவாசல்- 36, மன்னார்குடி-11, நன்னிலம்-3, நீடாமங்கலம்-9, வலங்கைமான்-16 மழை அளவு பதிவாகியுள்ளது. சராசரியாக 9 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

கூத்தாநல்லூர்

இதேபோல் கூத்தாநல்லூர், வடபாதிமங்கலம், லெட்சுமாங்குடி, பூதமங்கலம், பொதக்குடி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்நிலையில் அந்தபகுதிகளில் காலை 8 மணி முதல் பெய்ய தொடங்கிய மழை மதியம் வரை நீடித்தது. இந்த மழை காரணமாக தாழ்வான பகுதிகளிலும், சாலைகளிலும் தண்ணீர் தேங்கி நின்றது. தொடர் மழையால்

கூத்தாநல்லூர்-வடபாதிமங்கலம் சாலையில் கற்கள் பெயர்ந்து சேதமடைந்துள்ளது. கூத்தாநல்லூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மழை பெய்யும் அதே நேரத்தில் குளிர்ந்த காற்றும் வீசியது.

தினகரன்

**தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தொடரும் கனமழை: நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் குமரி விவசாயிகள் கவலை**




கன்னியாகுமரி: கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதை அடுத்து, அங்கு கொட்டிய கனமழையால் 300 ஏக்கரில் நெல் நாற்றுகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. நேற்று இரவு கன்னியாகுமரி மாவட்டத்தில் விடிய விடிய கனமழை வெளுத்து வாங்கியது. இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் வாகன ஓட்டிகள் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். சில இடங்களில்

போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. வயல்களில் தண்ணீர் தேங்கியதை அடுத்து தேவகுளம், தேரூர் உட்பட பல்வேறு பகுதிகளில் 300 ஏக்கரில் நெல் நாற்றுகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. பழையாறு, வள்ளியாறு, தாமிரபரணி உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. கன்னியாகுமரி, மனக்குடி, கொளிக்கரை உட்பட பல இடங்களில் கடல் கொந்தளிப்புடன் காணப்படுகிறது. இதனால் இன்று அதிகாலை கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்ற தணேஷ் என்ற மீனவர், கடல் அலையில் சிக்கி உயிரிழந்துள்ளார். அவரது உடல் மூன்று மணி நேர போராட்டத்திற்கு பின்னர் மீட்கப்பட்டது. இதேபோன்று முதலாறு என்ற இடத்தில் கனமழையால் முந்நிரி ஆலையின் புகைக்கூண்டு இடிந்து பக்கத்து வீட்டில் விழுந்தது. இதில் வீட்டில் படுத்துத் தூங்கிய சபரிபாய் என்ற பெண் உயிரிழந்தார். மழையால் பரலியாறு, மனலோடை உட்பட பல்வேறு பகுதிகளில் இன்று இரண்டாவது நாளாக ரப்பர் பால் சேகரிப்பு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. மழையால் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 1,400 குளங்கள் இதுவரை நிரம்பியுள்ளதாக நீர்வள ஆதார அமைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வடகிழக்கு பருவமழை தொடங்கியிருப்பதால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. விருதுநகர் மாவட்டம் சாத்தூர், தேனியில் அரண்மனைப்புதூர் மற்றும் திருச்சி, கோவை, திருவாரூர் மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று மழை பெய்தது.

**வறண்ட பிரதேசத்தை வண்ணமயமாக்கிய மலர்கள் : சுற்றுலா மையமாக மாறியது சிலி பாலைவனம்**




சிலி: பாலைவனம் என்றாலே வறண்ட பிரதேசம் என்ற எண்ணம் இருக்கையில் அதற்கு மாறாக சிலியில் உள்ள பாலைவனம் ஒன்று பூந்தோட்டமாக மாறியுள்ளது. வளேநர் பகுதியில் உள்ள அட்டகாமா பாலைனத்திலேயே இந்த ரம்மியமான காட்சியை பார்க்க முடிகிறது. சிலியின் வடக்கு பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன் கனமழை பெய்தது. இதனால் ஆங்காங்கே மண் சரிவுகள் ஏறபட்டு 28 பேர் உயிரிழந்தனர்.

ஆனால் அந்த பேய் மழையின் தாக்கம் பாலைவனத்தை சோலைவனமாக மாற்றியுள்ளது. புற்கள் கூட முளைக்காத அந்த வறண்ட பிரதேசம் தற்போது கருஞ்சிவப்பு மலர்களால் போர்வை போர்த்தியது போல் காட்சியளிக்கிறது.

பாலைவனத்தில் கானல் நீரை மட்டுமே பார்த்து வந்த அந்நகர மக்கள் தற்போது கருஞ்சிவப்பு, மஞ்சள், வெள்ளை, சிவப்பு, என பல வண்ணங்களில் மலர்களை குளிர்ச்சியாக ரசித்து வருகின்றனர். கடந்த 18

ஆண்டுகளில் இவ்வகையிலான மழையையும், மலர்களையும் கண்டதில்லை என அந்நகர மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். ஆள்நடமாட்டமே இல்லாத அந்த பகுதி தற்போது சுற்றுலா தளமாக மாறியுள்ளது.

**வட கிழக்கு பருவமழை தீவிரம் : தென் மாவட்ட அணைகளில் நீர்மட்டம் உயர்வு**




சென்னை: வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ள நிலையில் குமரி மாவட்டத்தில் நேற்று பிற்பகல் முதல் கனமழை பெய்தது. அணைகள் மூடப்பட்டிருந்தாலும் குழித்துறை தாமிரபரணி, பழையாறு, வள்ளியாறு ஆகியவற்றில் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. மேலச்சங்கரன்குழியிலிருந்து கீழச்சங்கரன்குழிக்கு செல்லும் சாலையில் சுமார் 25 அடி நீளத்திற்கு சாலை பெயர்ந்து கால்வாயில் விழுந்துள்ளது. வேம்பனூர் அருகே மரசேரி குளத்தில் உடைப்பு ஏற்பட்டதில் சுமார் 100 ஏக்கர் நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின. மாவட்டத்தில் அதிகபட்சமாக மயிலாடியில் 80.4 மி.மீ மழை பதிவாகி இருந்தது.

நெல்லை மாவட்டத்தில் மழை காரணமாக, கருப்பாநதிஅணை நீர்மட்டம் நேற்று ஒரே நாளில் 6அடி உயர்ந்தது. சேர்வலாறு, கடனாநதி,

ராமநதி அணைகள் தலா 2 அடி உயர்ந்தது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு மலைப்பாதை 155 மீட்டர் உயரமும், 2.55 கிலோ மீட்டர் நீளமும் கொண்ட மலைப்பாதையின் ஒரு பகுதி, 1.25 கிலோ மீட்டர் நீளத்திற்கு இடிந்து விழுந்தது. இதனால் சாலையோர தடுப்பு கற்கள் பெயர்ந்து விழுந்து பாதை முற்றிலும் சேதமடைந்துள்ளது. இதையடுத்து மலைப்பாதையில் வாகன போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

**மத்திய அரசின் நடவடிக்கை எதிரொலி : துவரம் பருப்பு கிலோ ரூ.35 குறைந்தது**



சென்னை: தமிழகத்துக்கு குஜராத், மத்தியபிரதேசம், உத்திரபிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா போன்ற வெளிமாநிலங்களில் இருந்து துவரம் பருப்பு விற்பனைக்காக வருகிறது. இந்தாண்டு இங்கு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், வரத்து அடியோடு குறைந்து, தேவை அதிகரித்ததன் காரணமாக பருப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதன் காரணமாக துவரம் பருப்பு வரலாறு காணாத வகையில் கிலோ ரூ.250 வரை விற்பனையானது. இது

சாமானிய மக்களை நிலைகுலைய செய்தது. இதையடுத்து நிலைமையை சமாளிக்கும் வகையில் மத்திய அரசு வெளிநாடுகளில் இருந்து பருப்பை இறக்குமதி செய்தது. மேலும், பருப்பு பதுக்கலை தடுக்கும் வகையில் இந்தியா முழுவதும் அதிரடி சோதனையும் நடத்தப்பட்டது. இதில், சுமார் 98,000 டன் அளவுக்கு பருப்பு வகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதையடுத்து பருப்பு விலை குறைய தொடங்கியது. கடந்த வாரம் துவரம் பருப்பு கிலோவுக்கு ரூ.30 வரை விலை குறைந்தது. இந்நிலையில், பருப்பு விலை தற்போது மேலும் குறைந்துள்ளது. அதாவது, கடந்த வாரம் 100 கிலோ எடை கொண்ட துவரம் பருப்பு ரூ.19,000க்கு விற்கப்பட்டது. இது தற்போது ரூ.17,000 ஆக குறைந்துள்ளது. துவரம் பருப்பு(சில்லரை விலை) கிலோ ரூ.200க்கு விற்கப்பட்டது தற்போது ரூ.180 ஆகவும், துவரம் பருப்பு(பாக்கெட்) ரூ.225லிருந்து ரூ.190 ஆகவும் விலை குறைந்துள்ளது. அதாவது கிலோவுக்கு ரூ.35 குறைந்துள்ளது. தான்சானியா துவரம் பருப்பு மூட்டை ரூ.16,000லிருந்து ரூ.14,000, 1 கிலோ(சில்லரை) ரூ.180லிருந்து ரூ.145, தான்சானியா துவரம்பருப்பு(பாக்கெட்) ரூ.190லிருந்து ரூ.155, உளுந்தம் பருப்பு ரூ.190லிருந்து ரூ.170, பர்மா உளுந்தம் பருப்பு ரூ.180லிருந்து ரூ.165, பாசிப்பருப்பு ரூ.130லிருந்து ரூ.120, பாசிப்பருப்பு(பாக்கெட்) ரூ. 140லிருந்து ரூ.130. பாசிப்பருப்பு(2ம் ரகம்) ரூ.125லிருந்து ரூ.110 ஆகவும், கடலைப்பருப்பு ரூ.80லிருந்து ரூ.75, கடலைப்பருப்பு(2ம் ரகம்) ரூ.75லிருந்து ரூ.70 ஆகவும் விலை குறைந்துள்ளது. இது குறித்து தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறியதாவது:மத்திய அரசு நடவடிக்கையால் இந்தியா முழுவதும் சுமார் 98,000 டன் அளவுக்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த துவரம் பருப்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மத்திய அரசு விவசாயிகளிடம் இருப்பு பருப்பை நேரடியாக

கொள்முதல் ெசய்யப்படும் என்று தெரிவித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் அகில இந்திய வணிகர் சங்கம் டெல்லியில் மத்திய அமைச்சர் அருண் ஜெட்லியை சந்தித்து துவரம் பருப்பை ரூ.145க்கு வழங்குவதாக அறிவித்துள்ளது. தமிழக அரசும் வருகிற 1ம் தேதி முதல் 91 அரசு விற்பனை அங்காடிகளில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.110 க்கு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது. இது போன்ற காரணங்களால் துவரம் பருப்பு விலை கிலோவுக்கு ரூ.35 வரை குறைந்துள்ளது. வரும் காலங்களில் துவரம் பருப்பு கிலோவுக்கு இன்னும் ரூ.20 முதல் ரூ.30 வரை குறைய வாய்ப்புள்ளது. தீபாவளி நேரங்களில் துவரம் பருப்பு ரூ.150 வரை குறைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. டிசம்பர், ஜனவரி மாதங்களில் புது துவரம் பருப்பு வரத் தொடங்கும். மேலும், பருப்பு ஸ்டாக் வைக்க மத்திய, மாநில அரசுகள் கட்டுப்பாடுகள் விதித்துள்ளதால் பருப்பு விலை அதிரடியாக குறைய வாய்ப்புள்ளது. தான்சானியா துவரம் பருப்பு வரும் காலங்களில் ரூ.125க்கு விற்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும்**



சென்னை: தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை நேற்று தொடங்கியது. இதுவரை தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியால் தமிழகத்தில் மழை பெய்தது. அதிகபட்சமாக நேற்று மயிலாடி, ஆய்குடி 80 மிமீ, பேச்சிப்பாறை 70 மிமீ, தென்காசி, விருதுநகர் 60 மிமீ, பாளையங்கோட்டை, பாபநாசம், சிவகிரி, வால்பாறை 50மிமீ, சாத்தூர், குடவாசல் 40 மிமீ, குழித்துறை, சோழவரம், நாகர்கோயில், மணப்பாறை, ஓமலூர், உத்தமபாளையம், ஈரோடு, கன்னியாகுமரி 30மிமீ மழை பெய்துள்ளது.

சென்னையில் நேற்று காலை முதலே பல்வேறு இடங்களில் திடீர் மழை பெய்தது. பூந்தமல்லி, சைதாப்பேட்டை, அண்ணாபல்கலைக் கழகம், அடையாறு, வட சென்னை, ஆகிய இடங்களில் காலை முதல் மதியம் வரை பெய்த மழை காரணமாக ஆங்காங்கே சாலையில் தண்ணீர் தேங்கியது. இந்நிலையில், தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவிழந்தது. இருப்பினும் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரியின் கடலோரப் பகுதிகள் அடங்கிய 12 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும்.

**ரூ.112 கோடி மதிப்புள்ள பருப்பு பறிமுதல்**




தானே: தானே போலீசார் மற்றும் பொது விநியோகத்துறை அதிகாரிகள் இணைந்து ஷீல்-டாய்கர் பகுதியில் உள்ள கிடங்குகளில் நேற்று அதிரடி சோதனை நடத்தினர். தானேயின் ஷீல்-டாய்கர் பகுதியில் உள்ள கரம் வேர்ஹவுசிங் கார்ப்பரேஷன், கார்க் வேர்ஹவுசிங் மற்றும் ஓம் வேர்ஹவுசிங் ஆகிய மூன்று கிடங்குகளில் நடத்தப்பட்ட இந்த சோதனைகளின்போது மொத்தம் 12,129 மெட்ரிக் டன் அளவுக்கு பல்வேறு பருப்பு வகைகள் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.112 கோடி ஆகும். இந்த மூன்று நிறுவனங்களுக்கும் எதிராக டாய்கர் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

**முட்டை விலை மேலும் 5 காசு உயர்வு**




நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் 5 காசு உயர்ந்து, 339 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 15 நாட்களில் முட்டை விலை 40 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில் முட்டையின் விலையில் மேலும் 5 காசு உயர்த்தப்பட்டுள்ளது. இதையடுத்து, 334 காசாக இருந்த முட்டையின் விலை, 339 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல், ஒரு கிலோ முட்டைக்கோழி விலை ரூ.64 ஆகவும், கறிக்கோழி விலை ரூ. 80 ஆகவும் உள்ளது. புரட்டாசி மாதம் முடிவடைந்ததை தொடர்ந்து, தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விற்பனை உயர்ந்து வருவதால், முட்டை விலை தொடர்ந்து உயர்த்தப்படுகிறது. கடந்த 15 நாட்களில் முட்டை விலை 40 காசு வரை உயர்ந்துள்ளது. பிற மண்டலத்தின் முட்டை விலை விவரம்(காசுகளில்): பெங்களூரு- 345, மைசூர்- 351, ஐதராபாத்- 315, மும்பை- 355, விஜயவாடா- 310, கொல்கத்தா- 342, டெல்லி -355 காசுகள்.

**சுட்டெரிக்கும் வெயில் ஓயாதாம்**




லண்டன்: உலகம் முழுவதும் சுட்டெரிக்கும் வெயில் ஆண்டாண்டு தொடர்ந்து அதிகரித்தபடியே தான் இருக்கும்; இப்படியே நீடித்தால் இன்னும் 15 ஆண்டில் 3 டிகிரி செல்சியஸ் வெயில் அதிகரிக்கும்; வழக்கமான வெயிலே அதிகமாக இருக்கும் என்கிறது ஐரோப்பிய கூட்டு ஆராய்ச்சி மையம். 155 நாடுகளை கொண்ட இந்த கூட்டமைப்பு தொடர்ந்து பல ஆய்வுகளை செய்து வருகிறது. பல நாடுகளும் தாங்கள் ஆராய்ந்த தகவல்களை கூட்டமைப்பு பரிசீலனைக்கு வைத்துள்ளன. வரும் டிசம்பர் மாதம் நடக்கும், உலக வெப்ப தடுப்பு மாநாட்டில் ஆராயப்படும். வானிலை மாற்றத்தை தடுக்க என்னென்ன வழிகள் என்று அதில் பேசப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**பொள்ளாச்சியில் கனமழை**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தென்மேற்கு பருவமழை பொழிந்தது. அதன்பின் கடந்த மாதத்தில் சிலநாட்கள் மட்டும் சாரலுடன் மழைபொழிந்தது. பின் பெரும்பாலான நாட்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. இருப்பினும் மழைப்பொழிவு தொடருமா என்று விவசாயிகள் காத்திருந்தனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக நகர் மற்றும்

சுற்றுவட்டாரத்தில் வெயிலின் தாக்கம் குறைந்திருந்தது. தொடர்ந்து நேற்று முன்தினம் இரவில் சாரல் மழை பொழிந்தது. இதையடுத்து நேற்று மாலை சுமார் 5மணியளவில் கனமழை பெய்ய துவங்கியது. இந்த மழை சில மணிநேரம் தொடர்ந்திருந்தது. கனமழையால் நகரில் பல இடங்களில் தண்ணீர் தேங்கி ரோட்டில் வழிந்தோடியது. கிராமபுற தோப்புகளில் தண்ணீர் தேங்கியது. மேலும் சுற்றுவட்டார கிராமங்களான ஆனைமலை, கோட்டூர், அம்பாராம்பாளையம், நெகமம், கோயில்பாளையம், பொன்னாபுரம் உள்ளிட்ட பல இடங்களில் நேற்று கனமழை பொழிந்தது. கனமழை தொடர்ந்திருந்ததால் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**இயற்கை வளத்தைக் பேணிக்காக்க உறுதி மேற்கொள்ள வேண்டும்**

பெ.நா.பாளையம், : அழிந்து வரும் இயற்கை வளங்களைப் பேணிக்காப்பதற்கு நாம் எல்லோரும் உறுதி மேற்கொள்ள வேண்டும் என கூடுதல் முதன்மை வனப்பாதுகாவலரும் கோவை மத்திய வனக்கல்லூரியின் இயக்குநருமான ராஜீவ் ஸ்ரீவத்சவா வலியுறுத்தினார். இந்திய அறிவியல் காங்கிரசின் கோவை கிளை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்திய பாரம்பரிய அறிவுவளம் என்ற தலைப்பிலான அறிவியல் கண்காட்சி கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. இதன் தொடக்க விழாவிற்கு கிளைத் தலைவரும்,கல்லூரி செயலருமான வாசுகி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் முரளீஸ்வரி வரவேற்றார்.கண்காட்சியைத் திறந்து வைத்து ராஜீவ் ஸ்ரீவத்சவா பேசும்போது இந்திய வனப்பரப்பானது மிகசிறந்த செல்வவளத்தை பெற்றது. மனிதகுல வாழ்க்கைக்கு பயன்படக்கூடிய எண்ணற்ற தாவரங்களையும், நீராதாரங்களையும் உடையது. ஆனால் இதனைப் பேணிகாப்பதன் முக்கியத்துவத்தை நாம் இன்னும் அறியவில்லை. எக்காரணத்தினாலும் வனங்களை நாம் அழிக்கக்கூடாது. அதன் பல்லுயிரினத்தன்மையானது நம்முடைய உணவுச் சங்கிலியில் மிகுந்த தொடர்புகளை உடையது. நம்முன்னோர்கள் இவற்றை

பேணிக்காத்தனர். இதனை உணர்ந்து நமது பாரம்பரிய அறிவை அறிவியல் பூர்வமாக அணுகி வளங்களை வளங்குன்றாமல் பயன்படுத்த வேண்டும் என்றார். இக்கண்காட்சியில் 40க்கும் மேற்பட்ட பள்ளி,கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் தட்பவெப்பம், மண் வளம், மழைநீர் சேகரிப்பு, மூலிகைகள், பல்லுயிர் தன்மையின் பாதுகாப்பு, வன வளம், நீராதாரங்கள் குறித்த மாதிரிகளை காட்சிக்கு வைத்திருந்தனர். குறிப்பாக நீண்டகாலம் வாழ்வதற்காக மலைவாழ் மக்கள் பயன்படுத்திய இன்றும் வழக்கத்தில் உள்ள 120 வகை மருத்துவத்தாவரங்களின் புகைப்படங்களும், விளக்கங்களும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது. நிறைவு நிகழ்ச்சியில் கண்காட்சியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இறுதியில் தாவரவியல் பேராசிரியர் பாலுசாமி நன்றி கூறினார்.

**நிலையற்ற தேயிலை விலை எதிரொலி தேயிலைகளுக்கு நடுவே காய்கறிகள் பயிரிடும் விவசாயிகள்**

ஊட்டி, : நீலகிரி மாவட்ட விவசாயிகளின் பிரதான தொழிலான தேயிலைக்கு நிலையான விலை கிடைக்காததால்,தேயிலை செடிகளுக்கு நடுவே ஊடு பயிராக மலை காய்கறிகளை பயிரிட்டு லாபம் ஈட்டி வருகின்றனர். நீலகிரி மாவட்டம் முழுவதும் சுமார் 65 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள் உள்ளனர். இம்மாவட்டத்தின் பொருளாதாரத்தை நிர்ணயிக்க கூடிய சக்தியாக தேயிலை மற்றும் சுற்றுலா விளங்கி வருகிறது. தேயிலை விவசாயம் மட்டும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அடுத்தபடியாக 7 ஆயிரம் ெஹக்டர் பரப்பளவில் உருளைகிழங்கு, கேரட், பீட்ரூட் போன்ற மலை காய்கறிகள் பயிரிடப்படுகிறது. இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக விலை வீழ்ச்சி காரணமாக தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. இதனால் தேயிலை தொழிலை நம்பியுள்ள சிறு, குறு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். நஷ்டம் காரணமாக பெரும்பாலான விவசாயிகள்

தங்களது தேயிலை தோட்டங்களை சரியாக பராமரிக்காமல் விட்டு விட்டனர். மேலும் ஒரு சில தேயிலை விவசாயிகள் தங்களின் தேயிலை தோட்டங்களை விற்று விட்டு சமவெளி பகுதிகளான கோவை, திருப்பூருக்கு இடம் பெயர்ந்து விட்டனர். இதனால் மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என குறைந்த சிறிய தோட்டங்கள் வைத்திருக்கும் விவசாயிகள், லாபத்தை அதிகரிக்கும் வகையில் தங்களின் தேயிலை தோட்டங்களுக்கு நடுவே ஊடுபயிராக மலை காய்கறிகளான உருளைகிழங்கு, கேரட் போன்றவற்றை தற்போது பயிரிட்டு வருகின்றனர். இதனால் தேயிலையில் கிடைக்கும் லாபத்தை விட அதிகளவு லாபம் கிடைப்பதாக விவசாயிகள் கூறி வருகின்றனர். ஊட்டி - மஞ்சூர் சாலையில் உள்ள காத்தாடி மட்டம், தேவர்சோலை, பி. மணியட்டி, கீழ் கைகாட்டி மற்றும் மஞ்சூர் உட்பட பல்வேறு பகுதிகளில் தேயிலை பயிர்களுக்கு நடுவே மலைகாய்கறிகளை பயிரிட்டு விவசாயிகள் லாபம் ஈட்டி வருகின்றனர். இதுகுறித்து விவசாயி சதீஸ் கூறுகையில், பசுந்தேயிலைக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. இதனை போக்கும் வகையில் தேயிலை தோட்டங்களுக்கு மத்தியில் கூடுதலாக மலை காய்கறிகளை பயிரிட்டு அதன் மூலமாகவும் ஒரளவிற்கு லாபம் பெற்று வருகிறோம், என்றார்.

**நீலகிரி மாவட்டத்தில் பருவமழை துவங்கியது மலைக்காய்கறி விவசாயிகள் மகிழ்ச்சி**

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்தில் வட கிழக்கு பருவமழை துவங்கியுள்ளதால் மலைக்காய்கறி பயிரிடும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஜூன் மாதம் துவங்கி ஆகஸ்ட் மாதம் வரை தென்மேற்கு பருவமழை பெய்யும். தொடர்ந்து அக்டோபர் மாதம் இறுதி வாரத்தில் துவங்கி இரு மாதங்கள் வட கிழக்கு பருவமழை பெய்வது வழக்கம்.வழக்கம் போல், கடந்த ஜூன் மாதம் தென்மேற்கு

பருவமழை துவங்கியது. ஒரு சில நாட்கள் மட்டுமே மழை பெய்தாலும், பல இடங்களில் சாலையில் மரங்கள் விழுந்து விபத்து நேரிட்டது. ஊட்டி - மஞ்சூர் சாலையில் நுந்தளா அருகே அரசு பஸ்சின் மீது மரம் விழுந்து வட மாநிலத்தை சேர்ந்த வாலிபர் உயிரிழந்தார். மேலும், மாவட்டத்தின் பல பகுதிகளில் மரங்கள் விழுந்து சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகம், நெடுஞ்சாலைத்துறை, தீயணைப்புத்துறை மற்றும் வனத்துறையினர் இணைந்து பணியாற்றி மரங்களை உடனுக்குடன் அகற்றியதால், போக்குவரத்து தடைகள் உடனுக்குடன் சீரமைக்கப்பட்டது. ஜூலை மாதம் முதல் மழை குறைந்தது. ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் மழை முற்றிலும் குறைந்து காணப்பட்டது. இந்நிலையில் இம்மாதம் துவக்கம் முதல் அவ்வப்ோபாது மழை பெய்து வந்தது. ஆனால், தொடர்ச்சியாக பெய்யவில்லை. அதே சமயம் வட கிழக்கு பருவமழை துவங்குவதற்கான எவ்வித அறிகுறிகளும் இல்லாமல் இருந்தது. மழை துவங்காத நிலையில், பனியின் தாக்கம் சற்று அதிகமாக காணப்பட்டது. இதனால், விவசாயிகள் கவலையில் இருந்தனர். இந்நிலையில், வானிலை ஆய்வு மையம் நேற்று முதல் பருவமழை துவங்கும் என தெரிவித்திருந்தது. அதற்கு ஏற்றார் போல், தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் நேற்று மழை பெய்துள்ளது. நீலகிரியிலும் நேற்று காலை முதல் மேக மூட்டம் காணப்பட்டது. காலை 11.30 மணியளவில் குன்னூர் பகுதியில் மழை பெய்தது. ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்தது. இதனால், குறித்த நேரத்தில் வட கிழக்கு பருவமழை துவங்கியதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். இந்த மழையால், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அணைகள் நிரம்ப வாய்ப்புள்ளது. எனவே, இம்முறை கோடையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது என பொதுமக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். பருவமழை துவங்கியுள்ளதால் நீலகிரியில் நீர் பனியின் தாக்கம் குறைய

வாய்ப்புள்ளது. இதனால், குளிர் குறையவும் வாய்ப்புள்ளது. மழை துவங்கியுள்ளதால், மலைப்பாங்கான பகுதிகளில் விவசாயம் செய்ய வாய்ப்புள்ளது. இம்முறை குறித்த சமயத்தில் வட கிழக்கு பருவமழை துவங்கியுள்ளதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதே சமயம் வட கிழக்கு பருவமழையின் போது, மலைப் பாங்கான பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்படும். நிலச்சரிவுகள் அபாயம் உள்ள பகுதியில் வாழும் மக்கள் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**தமிழக - ஆந்திர எல்லையில் அமைய இருக்கும்_ ஒருங்கிணைந்த தொழில் நகரத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகளை நட வேண்டும்: தனியார் கட்டுமான நிறுவனத்துக்கு பசுமை தீர்ப்பாயம் உத்தரவு**



தமிழக- ஆந்திர எல்லையில் அமைய உள்ள ஒருங்கிணைந்த தொழில் நகரத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகளை நட வேண்டும் என்று தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அடுத்த ஆரம்பாக்கத்தை சேர்ந்த எம்.மணிபாலன், தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்னிந்திய அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

ஆந்திர மாநில அரசு சார்பில், தமிழக-ஆந்திர எல்லையில், 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சிறப்பு பொருளாதார மண்டலம் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த தொழில் நகரம், சித்தூர் மாவட்டம், மல்லவேரிபள்ளம், அரூர் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட உள்ளது. அதற்காக ஆந்திர அரசு மற்றும் மயிலாப்பூரைச் சேர்ந்த ' சிட்டி என்ற கட்டுமான நிறுவனம் இடையே கடந்த 2006-ல் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இத்திட்டத்துக்காக அப்பகுதியில் தற்போது உரிய அனுமதி யின்றி ' சிட்டி நிறுவனம் மரங்களை வெட்டி வருகிறது.

இதனால் அப்பகுதியில் பல்வேறு சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படும். எனவே அப்பகுதியில் மரங்களை வெட்ட தடை விதிக்க வேண்டும். அந்த பகுதியில் பழைய படி பசுமை போர்வையை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு மனுதாரர் கோரியிருந்தார்.

இந்த மனு மீதான தீர்ப்பை 2-ம் அமர்வின் நீதித்துறை உறுப்பினர் நீதிபதி பி.ஜோதிமணி, தொழில்நுட்பத்துறை உறுப்பினர் பேராசிரியர் ஆர்.நாகேந்திரன் ஆகியோர் நேற்று வழங்கினர். அதில் கூறியிருப்பதாவது:

ஒருங்கிணைந்த தொழில்நகரம் அமையுமிடத்தில் 33 சதவீதம் பசுமை போர்வை இருப்பது அவசியம். அதனால் அப்பகுதியில், சித்தூர் மாவட்ட வன அலுவலரின் வழிகாட்டுதலின்படி சிட்டி நிறுவனம், 10 ஆயிரம் உள்நாட்டு வகை மரக்கன்றுகளை நட வேண்டும். அதை அந்நிறுவனம் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு பராமரிக்க வேண்டும். அப்பணிகளை மாவட்ட வன அலுவலர், தனக்கு கீழே உள்ள அதிகாரிகளைக் கொண்டு, மரக்கன்று சுயமாக வளரும் வரை கண்காணிக்க வேண்டும். இனி அப்பகுதியில் எந்த மரத்தையும் வெட்டக்கூடாது.இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது

**அடுத்த 24 மணி நேரத்துக்கு__ தமிழகம் முழுவதும் மழை தொடரும்_: வானிலை ஆய்வு மையம் தகவல்**




வடகிழக்கு பருவமழை காரணமாக கடலோர மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்கு கன மழை பெய்யக்கூடும். உள் மாவட்டங்களில் ஆங்காங்கே மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை நேற்று முன்தினம் தொடங் கியது. இதையடுத்து, தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. கன்னியா குமரி மாவட்டம் மயிலாடி, திருநெல்வேலி மாவட்டம் ஆயக்குடியில் 8 செ.மீ., கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையில் 7 செ.மீ., திருநெல்வேலி மாவட்டம் தென்காசி, விருதுநகரில் 6 செ.மீ., திருநெல்வேலி மாவட்டம் பாளையங் கோட்டை, பாபநாசம், சிவகிரி, கன்னியாகுமரி மாவட்டம் இரணியல், கோவை மாவட்டம் வால்பாறை ஆகிய இடங்களில் 5 செ.மீ., விருதுநகர் மாவட்டம் சாத்தூர், தேனி மாவட்டம் அரண் மனைபுதூர், திருச்சி மாவட்டம் துவாக்குடி, கோவை மாவட்டம் பொள்ளாச்சி, திருவாரூர் மாவட்டம் குடவாசல்,

கன்னியாகுமரி மாவட்டம் கொளச்சல் ஆகிய இடங்களில் 4 செ.மீ. மழை நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், மழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:

வடகிழக்கு பருவமழை காரணமாக கடலோர மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்கு கன மழை பெய்யக்கூடும். உள் மாவட்டங்களில் ஆங்காங்கே மழை பெய்யும். இலங்கை அருகே தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவிழந்துவிட்டது. எனினும் அப்பகுதியில் காற்று மேல் அடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதற்கிடையில், அரபிக்கடலில் உருவாகியுள்ள புயலுக்கு ‘சபாலா’ என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த புயல் மேலும் வடமேற்கு திசையில் நகர்ந்து ஏமன், ஓமன் ஆகிய அரபு நாடுகளின் கரையோரமாகச் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மும்பையில் இருந்து 1,090 கி.மீ. தூரத்திலும், ஓமன் நாட்டின் சலாலா நகரில் இருந்து 1,140 கி.மீ. தூரத்திலும் நிலைகொண்டுள்ளது. இதனால் தமிழகத்துக்கு எந்த பாதிப்பும் இல்லை.இவ்வாறு அவர் கூறினார்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**1.20 லட்சம் டன் பதுக்கல் பருப்பு: நாடு முழுவதும் பறிமுதல்**



நாடு முழுவதும் 9 ஆயிரத்து 304 இடங்களில் நடத்தப்பட்ட அதிரடி சோதனையில் சுமார் 1.20 லட்சம் டன் பருப்புகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. பதுக்கல் மீதான நடவடிக்கையை மத்திய அரசு தீவிரப்படுத்தி உள்ளதையடுத்து பருப்பு வகைகளின் விலை குறைந்து வருகின்றது.

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, துவரம் பருப்பு கிலோ 210 ரூபாய் வரை உயர்ந்து மக்களை திக்குமுக்காட வைத்தது. இதையடுத்து, பதுக்கல்காரர்கள் மீது மத்திய அரசு எடுத்த கடும் நடவடிக்கையால், சுமார் 1.20 லட்சம் டன் பருப்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநில அரசுகள் தொடர்ந்து பதுக்கல்காரர்களை தீவிரமாக தேடி வருகிறது.

இந்நிலையில், நாடுமுழுவதும் பறிமுதல் செய்யப்பட்ட பருப்பு பொருட்கள் சில்லரை சந்தைக்கு அனுப்பப்பட்டு வருவதால் துவரம் பருப்பு விலை மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நெல்லை மாவட்டத்தில் கன மழை: அணைகளில் நீர்மட்டம் உயர்வு

தமிழகத்தில் பருவநிலை மாற்றத்தால் கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக கடும் வெப்பம் நிலவி காணப்பட்டது. இந்த நிலையில் கடந்த சில

தினங்களாக பெய்து வரும் மழையால் வெப்பம் தணிந்து காணப்படுகிறது.

நெல்லை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று மாவட்டத்தில் பல இடங்களில் கன மழை பெய்தது. காலையில் இருந்தே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மாலையில் சில பகுதியில் லேசான மழை பெய்தது. பின்னர் இரவு 7 மணி அளவில் இடி மின்னலுடன் கன மழை கொட்ட தொடங்கியது.

சுமார் 45 நிமிடங்களுக்கும் மேலாக பெய்த கன மழையினால் தெருக்களில் மழை நீர் வெள்ளம் போல ஓடியது. தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கியது. நெல்லையில் பெய்த மழையினால் சாலைகள் மழை நீராக காட்சி அளித்தன. பிரதான சாலையில் மழை காரணமாக வாகனங்கள் செல்வதில் சிரமம் ஏற்பட்டது. இதனால் போக்குவரத்து பாதித்தது. கன மழையினால் வாகன ஓட்டிகள் அவதிப்பட்டார்கள். மாவட்டத்தில் நெல்லை, தென்காசி, செங்கோட்டை, ஆய்க்குடி, சிவகிரி உள்ளிட்ட பகுதிகளிலும் கன மழை கொட்டியது.

செங்கோட்டை மற்றும் மேற்கு தொடர்ச்சி அடிவார பகுதியான புளியரை முதல் செங்கோட்டை தவணை, வல்லம், பிரானுர், பண்பொழி, மேக்கரை, வடகரை உள்ளிட்ட பலவேறு பகுதிகளில் கடந்த இருதினங்களாக கத்திரிவெயிலுக்கு இணையாக காலையில் வெயிலும் பிற்பகலில் பலத்த மழை பெய்தது வருவதால் நிலத்தடிநீர் மட்டம் சற்று உயர்ந்து காணப்படுகிறது.

இந்நிலையில் நேற்று பிற்பகல் முதல் தொடர்ந்து மழை பெய்தது எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவில் மழை பெய்ததால் வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமத்துக்குள்ளாகினர்.

மழையானது இரவு வரை நீடித்ததால் ஏற்கனவே தென்மேற்கு மழை பொய்த்த நிலையில் மேற்கு தொடர்ச்சி அடிவார பகுதிகளில் பல்வேறு போராட்டங்களுக்கு பின் கார்சாகுபடி முடிந்தநிலையில் அறுவடை செய்யமுடியாமல் உள்ளனர் விவசாயிகள். தொடர்மழையால் சகதியால் அறுவடை இயந்திரம் வயல்வெளியில் இறங்க முடியாத நிலை உறுவாகி

உள்ளது மேலும் அறுவடை முடிந்த நெற்கதிர்களை கொண்டுவரமுடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர்.

இதனால் கார்சாகுபடி முடித்த விவசாயிகளின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. இருப்பினும் பிசான சாகுபடிக்கு தற்போது மழை தேவை என்பதால் பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து உள்ளனர். பாளையில் கன மழையினால் 3–க்கும் மேற்பட்ட இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன. பாளை தெற்குமுத்தாரம்மன் தெரு, பாளை என்.ஜி.ஓ காலனி பகுதிகளில் சாய்ந்த மரங்களை தீயணைப்பு படையினர். வெட்டி அப்புறப்படுத்தினர்.

நெல்லை மாவட்ட மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியின் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையினால் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்தது. இதனால் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. 143 அடி உச்சநீர்மட்டம் கொண்ட பாபநாசம் அணை நீர்மட்டம் நேற்று 71.10 அடியாக இருந்தது.

இன்று இது 72 அடியாக உயர்ந்து உள்ளது. அணைக்கு வினாடிக்கு 602 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 135 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. 156 அடி உச்சநீர்மட்டம் கொண்ட சேர்வலாறு அணை நீர்மட்டம் நேற்று 84.51 அடியாக இருந்தது. இன்று இது 86.22 அடியாக உயர்ந்து உள்ளது. 118 அடி உச்சநீர்மட்டம் கொண்ட மணிமுத்தாறு அணை நீர்மட்டம் நேற்று 61.95 அடியாக இருந்தது. இன்று இது 62.10 அடியாக உயர்ந்து உள்ளது.

இதே போல 85 அடி உச்சநீர்மட்டம் கொண்ட கடனா அணை நீர்மட்டம் நேற்று 56 அடியாக இருந்தது. இன்று இது 58 அடியாக உயர்ந்து உள்ளது. 84 அடி உச்சநீர்மட்டம் கொண்ட ராமநதி அணை 58.50 அடியாகவும், 72.10 அடி உச்சநீர்மட்டம் கொண்ட கருப்பாநதி அணை 58.07 அடியாகவும் உயர்ந்து உள்ளன. 36.10 அடி உச்சநீர்மட்டம் கொண்ட குண்டாறு அணை ஏற்கனவே நிரம்பி உள்ளது. 132.22 அடி

உச்சநீர்மட்டம் கொண்ட அடவிநயினார் அணை நீர்மட்டம் நேற்று 84 அடியாக இருந்தது. இன்று இது 84.75 அடியாக அதிகரித்து உள்ளது.